# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, பங்குனி 4 உ (17-3-74) ஞாயிறு மார்ச் 17 ஸபர் 2… புத்தகம் 27 இதழ்-29


## துரோகியை பேசவிடாது மக்கள் தடுத்தனர்!

அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்புத்தகவெளியீட்டுவிழா ஒன்று நடைபெற்றது. அவ்விழாவில் ஒட்டறை வீரரும் ஒரு பேச்சாளராக இருந்தார். அவர்பேசுவதற்குமேடையில் எழுந்து நின்று ஒலிவாங்கியில் வணக்கம் சொன்னதும், பொதுமக்கள் கூக்குரலிட்டு தொடர்ந்து 3 நிமிஷம் கூட பேசமுடியாதவாறு செய்துவிட்டார்கள்.

பொதுமக்களின், கூக்குரலைகண்ட அந்தச் 'சின்ன' மனிதர் பேசாமல் மேடைவிட்டிறங்கிவிட்டார். மேடையைவிட்டு இறங்கியபொழுது அவரது முகத்தில் கோபமும், துக்கமும் குடிகொண்டு இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

# தமிழ் இளைஞர்களின் சார்பில் தமிழர் கூட்டணி வாதாடும்!

'கொலை செய்தவனைக் கூட ஆறுமாதத்திற்கு மேல் விளக்கமறியலில் வைக்கக்கூடாதெனப் புதிய அரசமைப்பின் கீழ் சட்டம் கொண்டுவந்த அரசாங்கம் தமிழ் ஈழத்தின் சுதந்திரப் போரில் ஈடுபட்டார்கள் என்ற ஒரே காரணத்துக்காக எவ்வித நீதி விசாரணையுமின்றி—ஆண்டுக் கணக்காக எண்ணற்ற தமிழ் இளைஞர்களை சிறைகளில் தள்ளி கொடுமைப்படுத்தி வருகின்றனர். இந்த இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள், அன்றேல் இவர்கள் மீது வழக்குத் தொடருங்கள் என்று நாம் கொடுத்து வருகின்ற குரல் நீதி நெறி மறந்த ஆட்சியாளர்களின் செவிகளில் விழுவதாக இல்லை. இந்த இளைஞர்கள நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்படும்போது, அவர்கள் சார்பில் தமிழர் கூட்டணி நீதிமன்றத்தில் வாதாடும். தமிழர் கூட்டணியிலுள்ள சட்டத்தரணிகள் இந்த இளைஞர்களுக்காக கட்டாயம் வாதாடுவார்கள்'

(7-ம் பக்கம் பார்க்க)



இளைஞர் தலைவர் மாவை சேனாதிராசா. இவர் சிறையில் தள்ளப்பட்டு 9—3—74 லுடன் ஓராண்டு முடிந்தது: இன்னும் இவர் மீது விசாரணையுமில்லை; விடுதலையுமில்லை!

# மலையகத்தில் 'இனக்கொலை'!

## நிலைமையை ஆராய விசாரணைக்குழு! கூட்டணி ஆலோசனை!

மலையகத்தில் வாழும் இலட்சோபலட்சம் தோட்டத்தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபமான கட்டத்தை யடைந்துள்ளது.

பசியாலும், பட்டினியாலும் தோட்டத்தொழிலாளர்களில் ஒருவர் இருவர் நாள் தோறும் செத்துக்கொண்டிருக்கும் நிலை அங்கு தோன்றியுள்ளதாகவும் எச்சில் இலைகளை தேடியும்பிச்சை எடுத்தும் மலையகக் குழந்தைகள் தெருத்தெருவாகத் திரிவதாகவும் நெஞ்சுருக்கும் செய்திகள் மலையகத்திலிருந்து வந்து கொண்டிருக்கின்றன.

தம்மிடம் இருந்த நகை நட்டுக்களையும் தட்டுமுட்டுச் சமான்களையும் விற்று பட்டினியை ஓரளவு போக்கிவந்த தோட்டத்தொழிலாளர்கள் குடும்பங்கள் இன்று விற்பதற்கு வேறு ஒன்றுமில்லாமல் பசிபட்டினியின் காரணமாக தாம் பெற்ற பிள்ளைகளையே விலை கூறி விற்கின்ற பரிதாபக்காட்சியை மலையகத்தின் சில வீதிகளில் காணக்கூடியதாக இருப்பதாக நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தோட்டத்தொழிலாளர்களின் இன்றைய அவலநிலையையும், அவர்கள் படுகின்ற துன்பங்களையும் இதுவரை மலையகத்தில் ஏற்பட்ட பட்டினிச் சாவுகளின் தொகையைக் கணக்கெடுப்பதற்கும் ஓர் விசாரணைக் குழுவை நியமிப்பது குறித்து தமிழர் கூட்டணி அவசரமாக ஆலோசித்து வருகிறது.

''உணவுப் பொருட்கள் விநியோகத்தின் சீர்கேட்டினால் மலையகத் தமிழ் மக்கள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்; உண்ண உணவு கிடைக்காத நிலையில் அங்குள்ள மக்கள் கிலர் வீதியோரத்தில் வீசப்படும் எஞ்சிய உணவுகளைத்தேடி அலையும் பரிதாப நிலை மலையகத்தில் தோன்றியுள்ளது. சொந்த சகோதரர்கள் துன்பத்தில் வாடுகின்ற இந்த நிலையைப் பார்த்துக்

(7-ம் பக்கம் பார்க்க)

## காசிஆனந்தன் 36-வது பிறந்த நாள் விழா



செந்தமிழ் அன்னையின் விடுதலைக்காக சிறைச்சாலையில் கடந்த 639 நாட்களாக தவமிருந்துவரும் உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தனின் 36-வது பிறந்த நாளை சிறுடனும் சிறப்புடனும் கொண்டாடும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

4—4—74ல் வரும் காசி ஆனந்தனின் 36-வது பிறந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## கவியரங்கு, கருத்தரங்கு, நாடகம்

## அனைத்துக் கட்சியினர் பங்கேற்பர்!

## செல்வா பிறந்தநாள் விழாவுக்கு சென்னையில் ஏற்பாடு!

35 இலட்சம் ஈழத்தமிழர்களின் தலைவரும், தமிழ் ஈழத்தின் முதல்வருமாகிய பெரியவர் தந்தை செல்வா அவர்களின் 76வது பிறந்த நாள் விழா தமிழ் நாட்டின் தலைநகரமாம் சிங்காரச் சென்னையில் 31-3-74ல் வெகு விமரிசையாகக் கொண்டாடப் படவிருக்கிறது

சென்னை பெரியார் திடலில் நடைபெறவிருக்கும் இவ்விழா, ஒரு முழு நாள் நிகழ்ச்சியாக அமையும். கவியரங்கு, கருத்தரங்கு நாடகம் என மூன்று பிரிவாக நடைபெறும் இவ்விழாவை, உலகத்தமிழ் இளைஞர் பேரவையும் வேறு சில இயக்கங்களும் சேர்ந்து ஏற்பாடு செய்துள்ளன.

தந்தைசெல்வாவின் திருவுருவப்படத்தை பிரபல தொழில் அதிபர் மகாலிங்கம் திரை நீக்கம் செய்து வைக்கிறார்.

கவியரசு கண்ணதாசன் தலைமையில் நடைபெறும் கவியரங்கில், கவிஞர்கள் கோவேந்தன், சுரதா, டாக்டர் தமிழண்ணல், காவிரி நாடன், புலமைப் பித்தன், முத்துலிங்கம் ஆகியோருட்பட பத்துக் கவிஞர்கள் பங்கேற்கிறார்கள்.

கருத்தரங்குக்கு, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் தலைமை தாங்குகிறார். கருத்தரங்கில், திருவாளர்கள், சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம், குன்றக்குடி அடிகளார், தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி, அ. தி. மு. க. வைச் சேர்ந்த டாக்டர் ஹண்டே, வி. ஆர். பெருமாள், கலாநிதி இரா. சனார்த்தனம் எம். ஏ. புலவர் இராச, பேராசிரியர் நயினுமுகம்மது, கொடுமுடி சண்முகம், இரா. கணேசன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்-

(10-ம் பக்கம் பார்க்க)

## நாவல் போட்டி ரூபா 1000 பரிசு!

ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை அனைத்துலக ரீதியில் நாவல் போட்டியொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இப்போட்டியில் முதல் பரிசாக ரூபா ஆயிரம் வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது:

போட்டி விபரங்களை பேரவை விரைவில் வெளியிடவுள்ளது:

## ரஷிய எழுத்தாளர் நாடுகடத்தப்பட்டதற்கு ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவைகண்டனம்!

ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவையில் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இரு தீர்மானங்கள் வருமாறு:

'ஐ; நா. சபையின் மனித உரிமைச் சாசனத்தினுல் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் கருத்துத் தெரிவிக்கும் உரிமை, எழுத்துரிமைகளைக் குழிதோண்டிப்புதைக்கின்ற முறையில் — நோபல் பரிசு பெற்ற உலகப்பெரும் எழுத்தாளரான பாஸ்டர் நாக் அவர்களுக்கு முன்பு கொடுமை இழைத்த சோவியத் ரஷியா, இன்றும் அதே வழியைப் பின்பற்றி நோபல் பரிசுபெற்ற மற்ருேர் எழுத்தாளரான அலெக்சாந்தர் சொல்ஜெனிட்சன் அவர்களை மனிதாபிமானம் கொஞ்சம் கூட அற்ற முறையில் அவமானப் படுத்தி நாடு கடத்திய காட்டு மிராண்டித்தனமான, அநாகரிகச் செயலை, எழுத்தாளர்களின் சுதந்திரத்தையும் உரிமையையும் பேணிப் பாதுகாப்பதை தனது நோக்கமாகக் கொண்ட ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்த அநீதியைக் கண்டித்துக் குரல் கொடுப்பதற்கு சனநாயகம், மனித

(10-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



எஸ். ஞானசுந்தரம்
யாழ்ப்பாணம்.

கே:— அடுத்த தடவை வரும்போது தமிழில் பேசுவேன் என்றாராமே யாழ்ப்பாணத்தில்காணியமைச்சர்?

ப:— 'இன்று ரொக்கம் நாளை கடன்' என்று சில கடைகளில் விளம்பரப் பலகையொன்று நிரந்தரமாகத் தொங்குவதைப் பார்த்திருப்பீர்களே — அது போல யாழ்ப்பாணத்திற்கு செல்லும் சிங்கள அமைச்சர்கள் அங்கிருந்து திரும்பும் போது ஒவ்வொரு தடவையும் கூறுகின்ற சம்பிரதாய வாசகம் அது!

கே:— அரசாங்கத்தில் யாழ்ப்பாண அரசியல் அதிகாரி அருளம்பலத்தின் செல்வாக்கு எப்படியிருக்கிறது?

ப:— கொழும்பிலிருந்து நண்பகல் புறப்பட்டு யாழ்ப்பாணம் செல்லும் 'உத்தரதேவி' புகையிரதத்தை நிறுத்த வேண்டாம் என்று அருளம்பலம் அரசிடம் மன்றாடினார். இவர் இப்படிக் கேட்டதாக செய்தி வந்த மறு நாளே, உத்தரதேவி நிறுத்தப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஒரு விடயத்திலிருந்தே இவருக்கிருக்கும் செல்வாக்கை அளவிட்டுக் கொள்ளுங்கள்!

ஃ

இ. ராஜசேகரம்
கொழும்பு—6.

கே:— யாழ்ப்பாணத்தில் உணவுக்கஷ்டம் இல்லையென்று காணியமைச்சர் கூற உடனடியாக அதை மறுத்துப் பேசினாராமே தபாலமைச்சர் குமாரசூரியர். — பார்த்தீர்களா?

ப:— உரிமைப் பிரச்சினையில் இப்படித் துணிந்து பேசும் திராணியில்லா விட்டாலும்—உணவுப் பிரச்சினையிலாவது அவ்வாறு பேசி, ஆளுங்கட்சியின் ஏனைய எடுபிடிகளான அருளம்பலம், தியாகராசா, துரையப்பா போன்றவர்களைவிட தம்மைத் துணிச்சல்காரர் போலக் குமாரசூரியர் காட்டிக் கொண்டாரே — அதற்காக அவருக்கு வேண்டுமானால் ஒரு சபாஷ் போடுங்கள்!

கே:— எனக்குப் பதவி உயர்வு வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? இதற்கு ஒரு குறுக்கு வழி சொல்லுங்களேன்!

ப:— தமிழர்கள் நடத்தும் ஏதாவது ஒரு மாநாட்டைக் குழப்பி மக்களை அல்லோல கல்லோலப் படுத்தினீரானால் அடுத்த நாளே உமக்குப் பதவி உயர்வு நிச்சயம் கிடைக்கும்!

ஃ

க. சரவணமுத்து
கொழும்பு—13.

கே:— நான் ஓர் அரசாங்க அதிகாரி. அரசியற் கட்சியின் பிரதிநிதி ஒருவருக்கு பிரியாவிடை அளிப்பதற்கு நான் செல்லலாமா?

ப:— அரசாங்க அதிகாரியான திருமதி அல்பிரட் துரையப்பா, சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் வாலிப முன்னணித் தலைவரான அனுரா பண்டாரநாயக்காவுக்கு பிரியாவிடை கொடுப்பதற்கு பலாலி விமான நிலையத்துக்கு சென்றதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தியை வைத்துக்கொண்டு தானே இப்படிக் கேட்கிறீர்! ஆளுங்கட்சிக்கு வால்பிடிக்கும் துரையப்பாவின் மனைவி எப்படியும் நடக்கலாம் — நீர் அப்படி நடந்தால் வேலையிலிருந்து நீர் 'அவுட்'!

கே:— குமாரசூரியர் தலைமையில் வடபகுதியிலுள்ள சுதந்திரக்கட்சியின் குட்டிச்சாத்தான்கள் அண்மையில்பிரதமரைச்சந்தித்து தமிழர் உரிமை பற்றி பேசினார்களாமே!

ப:— புதிய அரசியல் சட்டத்தில் தமிழ் மொழியினதும் தமிழ் இனத்தினதும் உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்படுவதற்கு கை கட்டி வாய் பொத்தி பூரண ஆதரவு கொடுத்துவிட்டு — இப்படி அடிக்கடி பிரதமரிடம் ஓடிப்போய் தமிழர் பிரச்சினைகள் பற்றிப் பேசுவது போலப்பாசாங்கு செய்கிறார்கள் — சில பெண்கள் பழஞ்சலிப்புக்கு அழுவார்களே அதுபோல! இப்படி இதுவரை எத்தனை மாநாடுகளை பிரதமருடன் இவர்கள் நடத்தியதாக பத்திரிகைகளில் செய்திவந்தன! ஆனால் எதுவும் பயன் அளித்ததுண்டா? தமிழ் மக்கள் மத்தியில் உரிமை யுணர்வு வேகம்பெறும்போது அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் கொழும்புக்கு ஓடி வந்து அம்மாவின் பாதார விந்தங்களில் விழுகிறார்கள்— அதன் பின்னர், அம்மா எல்லாம் கவனிப்பதாக தம்மிடம் உறுதியளித்திருப்பதாக பத்திரிகைகளுக்கு நீண்ட அறிக்கையை விடுகிறார்கள்! ஒவ்வொரு தடவையும் விஷயம் அத்தோடு சரி!!

ஃ

முருகேசன்,
அட்டன்.

கே:— 'இலண்டன் முரசு' ஏட்டுக்கு சந்தாசெலுத்துவது எப்படி?

ப:— 'இலண்டன் முரசு', 18, மோரிஸ்வீதி, கொழும்பு-4 எனும் முகவரிக்கு சந்தாத் தொகையை அனுப்பிவைக்கலாம். ஆண்டொன்றுக்கு வானஞ்சலுக்கு ரூபா 30/- கப்பலஞ்சலுக்கு ரூபா 18-00.

கே:— எம். ஜி. ஆர். 'அட்ரஸ்' இல்லாமல் போய் விடுவார் என்று முன்பு கூறினீரே — இப்போது என்ன கூறுகிறீர்?

ப:— நான் சொன்னது அப்படியே உண்மையாகி விட்டது. ''அட்ரசே'' தேவைப்படாத அளவுக்கு அகில இந்தியப் புகழ் மிக்க அரசியல் தலைவராக எம். ஜி. ஆர் வளர்ந்து வருகிறார்!

வாமதேவன்
கோப்பாய்

கே:— ஒன்றுக்கு இரண்டு பல்கலைக் கழகங்களை தமிழ மக்களுக்கு தரப் போவதாக சிறீலங்கா சுதந்திர — சமசமாஜ — கம்யூனிஸ்ட் கூட்டணியினர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தந்த வாக்குறுதி என்னாச்சு?

ப:— ஏனைய பல வாக்குறுதிகளுடன் சேர்ந்து அதுவும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது. தமிழ மக்களுக்கு இரண்டு பல்கலைக் கழகங்கள் தருவதாக கூறியவர்கள், இறுதியில் நாடுமுழுவதற்குமாக ஒரு பல்கலைக் கழகமே இருக்கும் என்று சட்டமியற்றினார்கள். இப்போது 'வளாகம்' பற்றிய 'வழ வழா'ப் பேச்சுத்தான் எஞ்சி நிற்கிறது.

கே:— அண்மையில்நீங்கள் கேட்டு அல்லது படித்த இரசித்த சிறந்த நகைச்சுவை எது?

ப:— முற்போக்கு காங்கிரஸ் சார்பில் தனது மனைவி காங்கேசன்துறைத்தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட விருப்பதாக ஆ. தியாகராசா அறிவித்ததாக வந்த செய்தி!

ஃ

ராஜன்,
மட்டக்களப்பு.

கே:— மன்னார் இடைத்தேர்தல் முடிவை அறிந்த போது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் என்ன நினைத்திருப்பார்?

ப:— ''விதியே விதியே தமிழச் சாதியை என்செயக் கருதியிருக் கின்றுயடா?'' என்று விதியை நொந்து மனத்துக்குள் குமுறியிருப்பார்!

# குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டும் 'முற்போக்கு' கலாநிதி!

அண்மையில் மொழிபெயர்ப்பு நூலொன்றின் வெளியீட்டு விழா கொழும்பில் நடைபெற்றது. ஆக எழுபதே எழுபது பேர் மட்டுமே கலந்து கொண்ட இந்த விழாவில் முற்போக்கு 'குஞ்சுகள்' முன்னணியில் நின்று கொண்டு வழமை போலக் காட்டுக் கூச்சல் எழுப்பிடத் தவறவில்லை!

வெளியீட்டு விழாவுக்கு, வந்திருந்தோரில் ஒரு பதினைந்து பேர், மூல நூலை எழுதியவரின் முகத்துக்காக வந்தோர்; இன்னொரு பத்துப் பேர் பாதுகாப்புக்காக வந்த பொலிசார்; 15 பேர் புத்தகம் விற்பதற்காகவும் தேனீர் கொடுப்பதற்காகவும் வந்திருந்தோர்; பேச்சாளர்களாக வந்திருந்தோர் 10பேர்: இவைகளைக் கூட்டிக் கழித்துப்பார்த்தால், கூட்டம் கேட்க வந்தோர் ஆக இருபதே இருபதுபேர் தான்! இதில் கூட அரைவாசிப்பேர் என்ன நடைபெறுகிறது என்று 'சும்மா' வேடிக்கை பார்த்து வரப் போயிருந்தவர்கள்!

இந்த நூலைமொழிபெயர்த்தவர், ஏதோ ஒரு விதலாபத்தை எதிர்பார்த்து, 'காக்காய்' பிடிக்கும் நோக்குடனேயே மொழிபெயர்த்துள்ளதாக விழாவில் சிலர் கசமுசவென்று பேசிக் கொண்டனர்; குறிப்பிட்ட நூலை மொழி பெயர்த்தவராக அறிமுகப்படுத்தப் பட்டவருக்குமொழிபெயர்ப்பே ஓடாதென்றும்— இதை அவருடைய தந்தையாரே மொழிபெயர்த்துக் கொடுத்ததாகவும் வேறு சிலர்பேசிக் கொண்டனர்!

அது என்ன நாசமறுப்போ...? எப்படியோ போகட்டும்!! பந்தம் பிடித்தால் தானே இன்றைக்கு பதவி உயரும்? தகுதியும திறமைக்கும் எங்கே இடம்?

இவ்விழாவில் பேசிய 'முற்போக்கு' கலாநிதியொருவர், இந்நாட்டுத் தமிழ் மக்களின் உணர்வுகளை அறிவதற்கு முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புக்களைப் படிக்கவேண்டும் என்றார்.

'பருவத்தின் முறுக்கால்-பாலியல் சுரப்பிகளின்மூலம் உடம்பில் சுரக்கும் ஒருவகைத் திரவம் உடலிலிருந்து வெளியேறும் நிலையே காதல்' என்று ஓர் முற்போக்கு எழுத்தாளர் எழுதியிருக்கிறார்! இதுபோன்றவற்றைத்தான் படிக்கவேண்டுமென்பது கலாநிதியின் கருத்தோ? இதுதான் தமிழர்களின் உணர்வோ?

இதைப் படிப்பவர்கள் தமிழர்களைப் பற்றி என்ன கருதுவார்கள்? தமிழர்களின் பாரம்பரியமும் பழம்பெரும பண்பாடும் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறப்படுவோரால் நாசமாக்கப்படுகின்றன.

'யதார்த்தம்' என்ற பெயரில் பாலியல் கதைகளையும் பச்சை ஆபாசங்களையும் எழுதி இளைஞர்களையும் இளம் பெண்களையும் நாசமாக்கிக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கும் முற்போக்குக் காரர்களின் எழுத்துக்கள் தான், தமிழ் சமுதாயத்தின் உணர்வுகள் என்கிறார் பரிதாபத்துக்குரிய கலாநிதி!

தமிழ் அரசியல் வாதிகளின் கருத்துக்கள் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகள் அல்லவென்பதும் குண்டுச் சட்டிக்குள் குதிரை யோட்டுகின்ற கலாநிதி அங்கு சுக்கிய வாதம்!

குறிப்பிட்ட 20, 30 பேர் மத்தியிலேயே எந்நாளும் சுற்றிச்சுற்றி வரும் கலாநிதிக்கு தமிழ் மக்களின் உணர்வுகள் எப்படிப் புரியும்? ஒன்றுமட்டும் உண்மை — தமிழ் அரசியல் தலைவர்களைவிட, தமிழ் சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களிடம், இன்றைக்கு தமிழ் விடுதலை உணர்வு வெகு தீவிரமடைந்து வருகிறது என்பதுதான் அது!

'நெஞ்சில் கைவைத்து மனச்சாட்சியைத் தொட்டு நேர்மையுடன் எழுதுகின்றவர்களே முற்போக்கு எழுத்தாளர்கள்' என்றாராம் அதே கலாநிதி!

நாட்டின் அந்நிய செலாவணி மோசடியில் அகப்பட்டவர்கள்—

'ஸ்ரோர் கீப்பராக'— இருந்து தில்லுமுல்லு காரணமாக அதிலிருந்துவெளியேற்றப்பட்டவர்கள்—

ராஜாஜியின் கதையைத் திருடி, காப்பியடித்து எழுதி சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர்கள்—

இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ''மனச்சாட்சியைத் தொட்டு நேர்மையான'' முறையில் எழுதுபவர்கள் தானா—இதுதான் முற்போக்குகளின் இலட்சணமா—என்றெல்லாம் நல்ல வேளையாக கலாநிதியிடம் அங்கு எவரும் கேள்விக்கணை தொடுக்கவில்லை!

அதனால் அவர் அன்று தப்பிப் பிழைத்தார்!

இதே கலாநிதிதான் என்ன செய்கிறார்?

இலங்கை வானொலியில் தமிழ்ப் பகுதியை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, எல்லா நிகழ்ச்சியையும் தனக்கும் தனது கையாட்களுக்குமே பங்கு போட்டுக் கொண்டு— கைநிறைய சம்பாதித்து வருகிறார்!

நல்ல பல கலைஞர்கள்— நாடறிந்த திறமைசாலிகள் —ஏராளமானோர் வானொலியில் இடமின்றி ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப் பட்டு மனமுடைந்து இருக்கிறார்கள்!

இதுதான் 'நெஞ்சில் கை வைத்து—மனச்சாட்சியைத் தொட்டு நேர்மையுடன்' நடக்கின்ற இலட்சணமோ?

கடவுள் சமயம் மீது நம்பிக்கையற்றவர் — இந்த நாகரிக பீடத்தின் தலைமை பதவியில் அமர்ந்திருப்பது எந்த விதத்தில் நேர்மையாகும்?

இந்த விழாவில் பேசிய மற்றோர் முற்போக்கு எழுத்தாளர்—இந்திய தமிழ்ப் பத்திரிகைகளுக்கு தடைபோடுவதில் முழுமுச்சுடன் செயற்பட்டவர்—அமரர் ராஜாஜி அவர்கள் ஓர் எழுத்தாளரா? அவர் எழுதியதும் ஒர்




எழுத்தா? என்று கேலி பேசினாராம்.

ராஜாஜியின் படைப்புக்கள், காப்பியடித்து எழுதுவதற்கு மட்டுமே பயன்படக்கூடிய தென்பதுதான் முற்போக்காளர்களின் கருத்துப் போலும்!

ராஜாஜியை கிண்டல் பேசியவருக்கு சுடச்சுடப் பதில் கொடுத்தார் விழாவில் பேசிய சிங்கள எழுத்தாளர் ஒருவர்!

ராஜாஜியை கிண்டல் செய்து பேசியது கேட்டும்— தமிழரான கலாநிதிக்கு கோபம் வரவில்லை; சிங்களவருக்கு கோபம் வந்தது; சூடாகப் பதில் தந்தார்.

உணர்ச்சியே ஆகாது என்பவர்தானே இந்தக் கலாநிதி? மரக்கட்டைகளுக்கு எப்படி உணர்ச்சி ஏற்பட முடியும்?






இடமிருந்து வலம்:- 1: காட்சி வண்டியில் வந்த சுவாமி ஞானப்பிரகாச அடிகளாரின் ஆன்றவிந்தடங்கிய அற்புதத் தோற்றம்! 2. தமிழுக்கு வசனநடைதந்த ஆறுமுக நாவலரும் ஊர்வலத்தில் வந்தார்! 3. யாழ் கொண்டு தமிழ்பாடி பரிசுபெற்ற புலவன் யாழ்பாடி அரசவையில் கவிபாடும் காட்சி இது: 4. காட்சி வண்டியில் வந்த முத்தமிழ்வித்தகர் விபுலானந்த அடிகளாரின் தோற்றம்!




# 6. தமிழன்னை பேசினாள்!

கோவை-மகேசன்

'என் அன்புக்குரிய பிள்ளைகளே! வாழ்க நீவிர்! என் அடிமைத் தளையறுத்திடப் போராடிவரும் என் கண்ணின் மணிகளே; வாழ்க நீவிர்! மூன்னூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டில் அரியணையமர்ந்து, அரசோச்சி வந்த நான், காட்டிக்கொடுக்கும் சில கயவர்களையும் என் பிள்ளைகளாகப் பெற்றெடுத்த காரணமாக, முடியிழந்தேன்; கொடியிழந்தேன்; படையிழந்தேன்; நாடிழந்தேன்! என் கைகளில் அன்று மாட்டப்பட்ட அடிமைச் சங்கிலி இன்னும் அறுத்தெறியப்படவில்லை. நான் ஆண்டிருந்த அரியணையில் இன்று ஏதோ ஒரு 'அவலட்சணத்தை' உட்கார்த்திவைத்திருக்கிறார்கள் அந்தச் சிறுக்கியின் கொடுமையால் என் பிள்ளைகளாகிய நீங்கள் இன்று இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறீர்கள்! என் அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுதலை செய்து ஆட்சிச் செங்கோலை எனக்கு மீண்டும் தந்து எனக்கு முடிசூட்டி நான் ஆட்சி நடத்துகின்ற அழகை ஆசை தீரக் காண்பதற்காக நீங்கள் செய்து வருகின்ற தியாகங்களை, சிந்துகின்ற இரத்தத்தைக் கண்டு நான் பெருமிதமடைகிறேன். என் பிள்ளைகள், மோழைகள் அல்லர்; கோழைகள் அல்லர்; உணர்ச்சியற்ற வெறும் மரக்கட்டைகள் அல்லர்; தாயை மறந்த சண்டாளர்கள் அல்லர்; அவர்கள் வீரர்கள்; சிறந்த இலட்சியவாதிகள்; மானம் ஒன்றே பெரிதெனக் கொண்ட மறக்குடி மரபினர்; வீரம் விளைந்த பரம்பரையில் வந்தோர்; என் கண்ணில் நீர் வடிந்திடின், அவர்கள் நெஞ்சில் உதிரம் கொட்டும் என் வாழ்வுக்காகவே. பாம்பும் கொடுந்தேளும், பூரானும் உலவுகின்ற சிறைச்சாலையின் இருண்ட அறைக்குள் ஆண்டுக்கணக்காக இன்றும் தங்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என் அரும்புதல்வன் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் இன்னும் பல இளைஞர்களும்! இப்படிப்பட்ட தியாகத் திருவிளக்குகளைப் பெற்றெடுத்த எனக்கு ஏது குறை? ஆனாலும் ஏராளமான தியாகச் செம்மல்களை பெற்றெடுத்த நான், சில கயவர்களை, கருங்காலிகளை, துரோகிகளையும் பெற்றுவிட்டேனே என்று எப்போதும் வேதனைப்பட்டபடி இருக்கிறேன்! பட்டம் பதவிக்கும் அற்ப சலுகைகளுக்கும் ஆசைப்பட்டு மாற்றாருடன் சேர்ந்து — இத்துரோகப் பிள்ளைகள் — சூரியர்களும், துரோகப்பர்களும், அம்பலங்களும், பனியர்களும்,—செய்து வரும் அட்டூழியங்களைக் கண்டு என் இரத்தம் கொதிப்படைகிறது. எதிரிகளைக் கூட மன்னிப்பேன்; ஆனால் நான் ஒருபோதும் துரோகிகளை மன்னிக்கமாட்டேன்!

'சென்ற ஒரு கிழமையாக எனக்கு விழா எடுத்து மகிழ்கிறீர்கள்! கவலையெல்லாவற்றையும் மறந்த களிப்படைந்திருக்கிறீர்கள்! உங்கள் மகிழ்ச்சியை கண்டு நானும் சற்றுக் களிப்படைகிறேன். உலகத்துப் பேரறிவாளர்கள் எல்லாம் என் திறன் கண்டு—மகிழ்ந்து கூத்தாடுவது பார்த்து இதயம் நிறைந்த மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறீர்கள்! இதற்குக் கூட உங்களுக்கு எத்தனை தடைகள், சோதனைகள் ஏற்பட்டன? மாநகர சபையின் ஒத்துழைப்பு கிடைக்கவே கிடைக்காதென்றான் ஒரு துரோகி; மாநாட்டுக்கு வெளிநாட்டறிஞர்களை வரவிடாதே — மாநாட்டையே தடைசெய் என்றான் மற்றோர் துரோகி; மாநாட்டுக்கு வரமாட்டேன் என்று அழைப்பையே திருப்பி அனுப்பினான் தலைமைத் துரோகி; அப்பப்பா! எத்தனை துரோகிகள்—எத்தனை விதமான தடைகளைப் போட்டனர்! ஆட்சியாளர் அச்சுறுத்திப்பார்த்தனர்! அதற்கெல்லாம் அஞ்சாது எதிர்த்து நின்று—தடைகள் அனைத்தையும் பொடியாக்கி ஈழத்தில் இதுவரை நான் காணாத அளவு மிகப் பெரும் விழா எடுத்து மகிழ்ந்திருக்கிறீர்கள்! என் பிள்ளைகள் வித்தியானந்தன், தனிநாயக அடிகளார் பத்மநாதன், போன்றோரின் வீரத்தையும் துணிவையும் நான் எண்ணி எண்ணி மகிழ்கிறேன் —இதயம் பூரிக்கிறேன்! இப்படிப்பட்ட வீரர்கள்—எண்ணித் துணிந்த கருமத்தை திண்மையுடன் செய்து முடிப்பவர்கள் — இவர்களே என் பிள்ளைகள்! என் இரத்தத்தின் இரத்தங்கள்! இவர்களைப் பெற்றெடுத்ததால் நான் இன்று பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்கிறேன்!

'யார் யார் இந்த மாநாட்டுக்கு எதிராக திட்டமிட்ட சதிகளிலும் சூழ்ச்சிகளிலும் இறங்கினார்களோ—துரோகம் புரிந்தார்களோ அவர்கள் எனது பிள்ளைகள் அல்லர்—அவர்கள் தமிழர்களுமல்லர்! இதை எனது தீர்ப்பாக வெளியிடுகிறேன்! எனது உத்தரவாகப் பிரகடனப்படுத்துகிறேன்!

'என் உண்மையான பிள்ளைகளே' வாழ்க நீவிர்! வாழ்க நீவிர்! உங்கள் பணி சிறக்கட்டும்! விரைவில் எனது விடுதலை விழாவை—எனது முடி சூட்டு விழாவை—நான் செங்கோல் ஏந்தும் சிங்கார விழாவைக் கண்டிட ஏற்பாடுசெய்யுங்கள்!!'

—'பல்லுயிரும் பல்லுலகும் படைத்தளித்துத் துடைக்கின்றோர் எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பது போலிருக்கின்ற, செந்தமிழன்னை-சீரிளமைச்செல்வி—சிங்காரத் தமிழணங்கு—கோல மயிலாள்—குவலயத்தின் மூத்தாள்—கோடிக்கணக்கான தமிழர்களை ஒன்றிணைக்கும் ஒப்பற்ற தமிழ்த் தெய்வம் — காட்சி வண்டியொன்றில் ஊர்வலத்தில் வந்த தோற்றம் கண்டபோது—மேற் கண்டவாறாக நம்மைப் பார்த்துக் கூறுவதாகவே எனக்குத் தோன்றியது.

தமிழன்னை கொலு வீற்றிருந்த காட்சி வண்டியின் பின்னே—வேறோர் காட்சி வண்டியில் மற்றோர் இளமங்கை வந்துகொண்டிருக்கிறாளே—யார் அவள்? அவள் தான் 'யாழ் நங்கை' தமிழன்னையுடன் ஓர் உற்ற தோழி உடன் வரவேண்டாமா? அதனால் 'யாழ் நங்கை' வருகின்றாள்!

இவ்வாறு தமிழ்த்தாய் தன் பாங்கி யாம் யாழ் நங்கையுடன் வந்து கொண்டிருக்க, பின்னால், தமிழ்ப்பெரும்புலவர்கள், அறிஞர்கள் தத்துவ வித்தகர்கள் ஆகியோரின் உருவங்களைத் தாங்கிய காட்சி வண்டிகளைக் காண்கிறோம்.

அகத்தியர்— (குள்ளமான அகத்தியரை அப்படியே எடுத்துக் காட்டும் வகையில் தத்ரூபமாக அகத்தியராகவே வேஷமிட்டு வந்த அந்தக்குட்டை மனிதரை எங்கே தேடிப் பிடித்தார்களோ?)

ஒன்றே முக்கால் அடியால் உலகை அளந்திட்ட வான் புகழ்கொண்ட வள்ளுவன்—

சங்கப்பெரும் புலவன்—ஈழத்துப் பூதன்தேவனார்—

இத்தாலியராகப் பிறந்தும் இன்பத் தமிழ் மீது பற்றுக்கொண்டு தமிழராக வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்திட்ட வீரமாமுனிவர்—

'இங்கு ஓர் தமிழ் மாணவன் தூங்குகின்றான்' என்று தமதுகல்லறையிலே எழுதும்படி 'உயில்' எழுதி வைத்து தமிழ் மீது தாம் கொண்டுள்ள சடிலையற்ற காதலை வெளிப்படுத்திய ஜி. யு. போப்'—

உலகமொழிகள் அனைத்தினதும் தாய்மொழி தமிழே என்பதை நிரூபித்து தமிழ் மொழியின் பெருமையை தமிழரல்லாதோரும் அறியும்படி செய்த ஈழத்துப் பெரும் புலவர் வண சுவாமி ஞானப்பிரகாச அடிகளார்—

'அன்ன நடை பிடியினடை
அழகு நடையல்லவென
அகற்றி அந்நாட்
பன்னுழுது புலவரிடைச்
செய்யுணடை பயின்ற
தமிழ்ப் பாவை யாட்கு
வன்ன நடை வழங்கு நடை
வசன நடை எனப்
பயிற்றி வைத்த'

ஆசானும் ஆறுமுகநாவலர்—

யாழ்நூல் தந்திட்ட மீன் பாடும் தேனாட்டின் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார்—

ஈழத்து இஸ்லாமியத் தமிழ் பெரும் புலவர் சித்திலெப்பை—

ஆடிப்பிறப்புப் பாட்டுப் பாடி அமிழ்தின் சுவையைத் தந்த நவாலியூர் சோமசுந்தரப் புலவர்—

சங்க இலக்கியமாம் அகநானூற்றுக்கு உரைகண்ட ஈழத்துப் பேரறிஞர் கணேசையர்—

—இப்படி தமிழுக்கு தொண்டு செய்த எண்ணற்ற தமிழ்ப் புலவர்களுடன், ஈழத்துத் தவ சிரேட்டர் யோகர் சுவாமிகள், ஈழத்தின் அரசியல் விடுதலைக்காக வெள்ளையருடன் போராடிய சேர். பொன். இராமநாதன் சேர் பொன். அருணாசலம், ஆகியோரையும் காட்சி வண்டிகளில் காணுகின்றோம்.

இதைத்தொடர்ந்து—மன்னும் 'சிலப்பதிகாரம்' என்ற மணி ஆரத்திலிருந்து ஓர் நெஞ்சுருக்கும் காட்சியைத் தாங்கியபடி ஊர்தியொன்று வருகிறது:

'மெய்யிற் பொடியும், விரித்த கருங் குழலும்—கையில் தனிச் சிலம்பும்' கொண்டு கண்ணீர் பெரு

(8-ம் பக்கம் பார்க்க)



காட்சி வண்டியொன்றில் வந்த தமிழன்னையின் எழிலார்ந்த தோற்றம்

# 'யாழ் மாநகரசபை, காங்கேசன்துறை தேர்தல்களை நடத்திப் பாருங்கள்!'

## ஆட்சியாளருக்கு அமிர்தலிங்கம் சவால்!

"மன்னார் இடைத்தேர்தல் முடிவைப் பற்றி திரு. குமார சூரியரும் அவரது தமிழ்ப் பிரதேச அமைப்பாளர்களும் ஆனந்தப்படுவது வேடிக்கையாயிருக்கிறது.

1970-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சிவேட்பாளர் ஜனுப் காதர் 513 வாக்குகளைப் பெற்றுக் கட்டுப்பணத்தையும் இழந்தார். இடைத் தேர்தலில் ஜனுப் காதர் தனது கட்சி சார்பாகப் போட்டியிடாது சுயேச்சையாகப் போட்டியிட்டு 469 வாக்குகளைப் பெற்றார்.

சென்ற நான்கு ஆண்டுகளாக மன்னார் மாவட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக அவர் புரிந்த சேவைக்கு கிடைத்த வாக்குகள் 469 என்றால் அது தமிழ்ப் பிரதேச சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளருக்கும் இளைகளுக்கும் பெருமை தருவது விசித்திரமே.

இந்த 469 வாக்குகளைத் தவிர எஞ்சிய வாக்குகள் அத்தனையும் ஆளும் கட்சிக்கு எதிராக, குடியரசு அரசியல் அமைப்புக்கு விரோதமாகவே பதிவு செய்யப்பட்டன; ஐக்கிய தேசியக்கட்சி தன் தேர்தல் பிரசாரத்தில் இவ்வரசியல் அமைப்பை



மாற்றுவோம் என்ற உறுதியை மன்னார் வாக்காளருக்கு அளித்தனர்.

தமிழ் மக்கள் இனவாத அரசியலை விடுத்து தேசிய அரசியல் கட்சிகளை ஆதரிக்கத் தொடங்கியிருக்கின்றனர் என்று சிலர் மன்னார் தேர்தல் முடிவுபற்றி விமர்சிக்கின்றனர் மாறாக தமிழ் பேசும் மக்களை மத அடிப்படையில் பிரிக்கும் தந்திரம் அங்கு வெற்றிபெற்றதென்றே கூறவேண்டும். தமிழ் பேசும் இஸ்லாமிய வாக்காளர்கள் ஜனுப் ரஹீமை ஆதரித்துத் திரண்டனர்; அவர்கள் மத்தியில் பதியப்பட்ட வாக்காளரில் 90 சத வீதத்தினர் வாக்களித்தனர். ஜனுப் ரஹீமின் வெற்றிக்கு மூலகாரணம் அதுவே.

தமிழ் வாக்காளரில் 82 சத வீதத்தினரே வாக்களித்தனர் ஆனால் வாக்களித்த தமிழ் வாக்காளரில் 86 சத வீதத்திற்குமேல் தமிழர் கூட்டணி வேட்பாளருக்கே ஆதரவு கொடுத்தனர். மன்னாரில் தமிழ்பேசும் சமுதாயத்தின் ஒற்றுமை ஓரளவு சிதைந்தமை பற்றி தமிழர் கூட்டணி கவலைப்படுகின்றது;

ஆனால் தமிழ்பேசும் இஸ்லாமிய மக்களையும் எம் மினத்தின் ஓர் அங்கமாக இணைக்கும் முயற்சிகளைத் தமிழர் கூட்டணி தொடர்ந்து மேற்கொள்ளும்.

தமிழ் இளைஞர் சமுதாயம் மன்னார் மாவட்டத்தின் சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத உணர்ச்சியும் எழுச்சியும் பெற்றிருப்பதை மன்னார் இடைத்தேர்தலில் கண்டோம்.

எனவே உண்மை நிலைபுரியாது தமிழர் கூட்டணி தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு இழந்துவிட்டதென்று நினைப்போர் காங்கேசன்துறை இடைத்தேர்தலையோ யாழ்ப்பாணம் மாநகர சபைத்தேர்தலையோ நடத்திப்பார்க்கட்டும்.'

—இவ்வாறு தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

---

எண்ணம்

# ஏழை அழுத கண்ணீர்!

எங்கு நோக்கினும், பசி, பட்டினி என்ற கூக்குரல்!

எங்கு நோக்கினும் இல்லாமை, ஏழ்மை, அவலம்!

நாளேடுகளைப் புரட்டினால், நாள்தோறும் நெஞ்சைப் பிழியும் துன்பச் செய்திகள்! பட்டினிச் சாவுகள் பற்றிய உள்ளத்தை உறையவைக்கும் செய்திகள்!!

எச்சில் இலை தனில் எறியும் சோற்றுக்கு 'பிச்சைக்காரர்கள்' போல மக்கள் சண்டையிடுகின்ற நிலை!

ஆம், இந்நாட்டின் மக்கள் அனைவருமே இன்று பிச்சைக்காரர்களாக்கப்பட்டுவிட்டார்கள்!

நள்ளிரவு நாடகம் மூலம்—நாள் தோறும் விலைவாசிகள் சடசடவென உயர்ந்துகொண்டே போகின்றன;
இல்லை—உயர்த்தப்பட்டுக்கொண்டே போகின்றன!

மக்களால் எவ்வளவு முயன்றாலும் எட்டிப்பிடிக்கமுடியாத அளவுக்கு — தாங்கிக்கொள்ளமுடியாத அளவுக்கு— அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் ஏறிக்கொண்டேயிருக்கின்றன!

விலைவாசி உயர்வு ஒருபுறம் — உணவுப் பொருட்களின் பயங்கரத் தட்டுப்பாடு மறுபுறம்!

அரிசி எடுத்துச் செல்வதற்கும், விற்பதற்கும் பூரணமாகத்தடைவிதித்திருக்கும் அரசின் முட்டாள்தனமான நடவடிக்கையினால் நகர்ப்புறத்திலுள்ள மக்கள் — அரிசி விளையாத பகுதிகளிலுள்ள மக்கள்—இன்றைக்குப் பசியும் பட்டினியுமாகக் கிடக்கிறார்கள்!

அரிசி எடுத்துச்செல்வதையும், விற்பதையும் தடுத்த அரசாங்கம்— நியாய விலையில் கூட்டுறவுக் கடைகளில் போதுமான அரிசியை மக்களுக்கு கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

ஆனால் அந்தக் கடமையைச் செய்ய அரசு தவறிவிட்டது!

72 சதத்திற்கு விற்றுவந்த சீனி, இரண்டு ரூபாவாக்கப்பட்டு அதன்பின் இப்போது இரவோடிரவாக ஐந்து ரூபாவுக்கு திடீரென உயர்த்தப்பட்டது!

இதனால்—சீனியை ஏற்கெனவே வாங்கிப் பதுக்கிவைத்திருந்த வியாபாரிகளுக்கே 'சுவீப்' விழுந்தது!

பாணுக்காக—மக்கள் தெருத்தெருவாக அலைகிறார்கள்! பாணுக்காக ஆளுக்காள் அடித்துக்கொள்கிறார்கள்—கொலைகள்கூட நடைபெறுகின்றன. இதைவிட வேறு கேவலம்—அவமானம் நமது நாட்டுக்கு உண்டா?

பங்கீட்டுப் புத்தகத்துக்கு தரப்பட்டுவந்த ஒரு இறாத்தல் மாவுக்கும் இவ்வாரத்திலிருந்து ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. 'ஆட்டாமா' என்பது இப்போது கண்ணிலே கூடப் படுவதில்லை!

எரிபொருள்களின் விலை எக்கச்சக்கமாகக் கூடிவிட்டது!

பஸ் கட்டணங்கள், ரயில் கட்டணங்கள் —அனைத்துமே உயர்த்தப்பட்டுவிட்டன.

வாழ்க்கைச் சுமையை தாங்கமுடியாமல் — வாழ்வே விரக்தியடைந்த நிலையில், பைத்தியக்காரர்கள்போல என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கிறார்கள் மக்கள்!

தோட்டத் தொழிலாளர்களின் நிலையோ — கேட்டால் நெஞ்சம் பதைக்கிறது!

போதிய வேலையின்மை—ஊதியமின்மை—உணவின்மை நிலமின்மை—இவற்றால் பாதிக்கப்பட்டு — தோட்டங்களை விட்டு வெளியேறி தெருத்தெருவாக—நடுத்தெரு நாராயணர்களாக—அலைய வேண்டிய பரிதாப நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்!

அந்நியச்செலாவணியை அள்ளித் தரும் அந்த நடமாடும் தெய்வங்கள் இன்றைக்கு நாள்தோறும் பசியால் செத்துக்கொண்டிருக்கின்றனர்.

தொழிலாளர்களுக்காக நடைபெறுவதாக கூறப்படும் இன்றைய ஆட்சியில்—தொழிலாளர்களின் மாஜி தலைவர்கள் நடத்தும் ஆட்சியில் — 'போலிச் சோசலிசவாதிகளின்' ஆட்சியில் இலட்சம் மலைநாட்டுத் தொழிலாளர் கண்ணீர்வடித்து கதறியழுகிறார்கள்!

விலைவாசியைக் குறைப்போம்—வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் — வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்— என்றெல்லாம் பொய்வாக்குறுதிகளை அள்ளி வீசி, ஆட்சி பீடத்தை கைப்பற்றியவர்களின் ஆட்சியில்—

நாமெல்லாம், ஏழைகளுக்காக—தொழிலாளர்களுக்காக—நீலிக்கண்ணீர் வடித்து—அவர்களை வைத்தே அரசியல் பண்ணி அதிகாரத்தைப் பிடித்தவர்களின் ஆட்சியில்—

இன்றைக்கு அன்றாட வாழ்வுக்கே என்ன செய்வோம்—ஏது செய்வோம்—என்று ஏதும்புரியாமல் திகைத்து நிற்கிறார்கள் மக்கள்!

அவசரகாலச் சட்டத்தையும் — ஆயுதப் படைகளின் துணையையும் கொண்டு—சர்வாதிகாரத்தனமான சட்டங்களைப்போட்டு—மக்களை வாட்டி வதைத்து வருகிறது போலிச் சோசலிஸ்டுகளின் பொல்லாத ஆட்சி!

மக்கள் எக்கேடு கெட்டாலும்—கிடைத்த அதிகாரத்தைப் பலப்படுத்தி, ஆட்சியின் காலத்தை நீட்டி, தொடர்ந்து பதவியில் ஒட்டியிருந்து—தம்மையும், தம்மைச்சார்ந்தோரையும் வளர்த்துக்கொள்வதொன்றே இன்றைய ஆட்சியாளரின் குறிக்கோளாக இருக்கிறது!

ஆனால் ஒன்றே ஒன்றைக் கூறவிரும்புகிறோம்—
ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளாகும்! வேலாகும்!
அறம் இறுதியில் வெல்லும்!!

மக்கள் விரோத 'ஜார்' ஆட்சியே—மக்கள் எதிர்ப்புக்கு முன் தாக்குப் பிடிக்கமுடியாது சடசடவெனச் சரிந்ததை வரலாறு கூறும் போது— இந்தப்போலிச்சோசலிஸ்டுகளின் ஆட்சி எம்மாத்திரம்?

இவர்கள் ஆட்சிக்கு வந்து செய்தது ஒன்றே ஒன்றுதான்!

அருமையான சோசலிச தத்துவங்களைக் கூட மக்கள் வெறுக்கின்ற நிலையை ஏற்படுத்திவிட்டார்கள் — தங்கள் போலித்தனமான—ஆசாடபூதித்தனமான—போலிச் சோசலிச நடவடிக்கைகளினால்!

---

# கட்டுண்ட அடிமைகளே!

—திருமலை சுந்தா

அது சூனியக்காரியின் பேச்சு
அந்த ஜனநாயகத் திரைக்குப் பின்னால்
அவளின் அடக்குமுறை ஆட்சி
நடக்கிறது
'தமிழரின் உரிமை' என்ற
மாயப்பொடியில்,
சில மீன்கள் துள்ளுகின்றன,
தூண்டில் புழுவை விழுங்கி மடிவதற்கு.
அவள் வெற்றிச் சிரிப்பு சிரிக்கின்றாள்
சதிமோச—சர்வாதிகார
—ஏதேச்சாதிகார
தொனியுடன்தான் சிரிக்கின்றாள்
சீர்திருத்தங்கள்—சலுகைகள்—
உரிமைகள்
அனைத்தும் உங்களுக்கே என்கிறாள்
அடிமை பிசாசுகள் வாய்
பிளக்கின்றன
பதவிகள் அடிமைகளை
அலங்கரிக்கின்றன
தூக்கமாத்திரை தின்ற மந்திகள் போல
படுக்கிறார்கள் — புரளுகிறார்கள்
உரிமை கிடைத்தது என்கிறார்கள்
பிறகு...பதவியின் உதவியால்
சாப்பிடுகிறார்கள்—படுக்கிறார்கள்
கனவு காண்கிறார்கள்—ஏதோ(?)
உளறிக் கொட்டுகிறார்கள்
'மரவள்ளி சாப்பிடு—
பொருளாதாரத்தைப்
பேணு' என்கிறார்கள் மேடையில்
தொண்டை நோ அடங்க பிஸ்கி
அவர்கள்...பறந்து திரிய
வான ஊர்தி—வெளிநாட்டு சுற்றுலா
அவள் சிரிக்கிறாள்-கொக்கலங்கொட்டி
அவள் நகைக்கின்றாள்
அவளின் அட்டகாசத்திற்கு அளவே
தெரியாது - சிரிக்கின்றாள்
இது எங்களுக்கு கேட்கிறது
ஆனால்...
இந்த அடிமைகளுக்கு
...கேட்கவில்லையே
அது...
சூனியக்காரியின் அட்டகாச
சிரிப்பு...
கட்டுண்ட அடிமைகளே
வாருங்கள் வழிக்கு!!

---

## காசிஆனந்தன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளை விமரிசையாகக்கொண்டாடுவதென அண்மையில் நடைபெற்ற காசி ஆனந்தன் இலக்கிய வட்டத்தின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் திரு. திமிலைக் கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதைச் செயற்படுத்துவதற்காக ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது: இக்குழுவில் திருவாளர்கள் தவராசா ஆலாலசுந்தரம், நடேசானந்தன், சரவணபவன், இராமனுதன் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர்.

கவிஞரின் பிறந்த தினமான 4—4—74-ம் திகதியை ஈழத்திலுள்ள தமிழ் கலாச்சார மன்றங்கள், இளைஞர் இயக்கங்கள், மாணவ மன்றங்கள், கிராம முன்னேற்றச்சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள், இலக்கிய மன்றங்கள் போன்ற பல தரப்பட்ட மன்றங்கள் விமரிசையாகக் கொண்டாடும்படி காசி ஆனந்தன் இலக்கிய வட்டத்தினர் வேண்டுகோள் விடுப்பதாயும் தீர்மானிக்கப்பட்டது;

மேலும் அத்தினத்தில் கவிஞரின் கவிதை நூல் ஒன்றையும் வெளியிடுவதாக உத்தேசித்துள்ளது; அதே நேரத்தில் 'காசி ஆனந்தன் கவி' எனும் தலைப்பில் ஒரு கவிதைப் போட்டி நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இது விடயத்தில் கவிதை அனுப்பவிரும்பும் கவிஞர்கள் எதிர்வரும் 30—3—74ம் திகதிக்கு முன்னதாக கவிஞர் திமிலைக்கண்ணன் திமிலைதீவு, மட்டக்களப்பு'' என்னும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். தெரிவு செய்யப்படும்மூன்று கவிதைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

---

## தமிழகத்தில் முப்பெரும் இழப்புக்கள்!

● வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வடலியடைப்பை பிறப்பிடமாகக் கொண்டவரும் — பேரறிஞர் அண்ணாவின் வலதுகரமாக இருந்து 'திராவிட நாடு' இதழை நடத்தியவரும், இந்தி எதிர்ப்பு வீரருமான பெரியார் சுழ்ந்தடிகள் அண்மையில் காஞ்சிபுரத்தில் இயற்கையடைந்தார்.

● பிரபல எழுத்தாளரும், கவிஞருமான திரு. கொத்தமங்கலம் சுப்பு அண்மையில் சென்னையில் காலமானார்.

● சிறந்த திரைப்பட நடிகரும் கலைஞருமான திரு. ஜே. பி. சந்திரபாபு சென்னையில் காலமானார்.

# வாடுகிறான் வடக்கில் பாடுபடும் விவசாயி! ஏடுகளில் பெருகுகிறது அரசின் உணவுற்பத்தி!

இன்றைய இலங்கையில் உண்ண உணவின்றி பெரும்பாலான மக்கள் எலும்புந் தோலுமாகக் காட்சி தருகிறார்கள்; மக்கள் தங்களுக்குத்தேவையான தானிய வகைகளைச் சேகரித்து வைக்காவிடில் நிச்சயமாக அவர்கள் பட்டினி கிடக்கநேரிடும் என்பதைத் தமிழ் மக்களுக்குத் தெரிவிப்பதுடன் உணவு தானியங்களைச் சேகரித்து வைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

## அரசாங்கத்தின் உதாசீனம்

தேசிய நாளேடுகளிலும், தேசிய பேரவையிலும் ஆட்சியாளரின் மேடைப் பேச்சிலும் தமிழ் பகுதிகளில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது; மக்கள் பயிரிட விரும்புகின்றவற்றைப் பயிரிடுவதற்கு அரசாங்கம் தடையாக இருக்கிறது. அரசாங்கம் விரும்பியவற்றைப் பயிரிடவும் முடியாதிருக்கிறது; மாரி காலத்தில் தண்ணீரோடும் கோடைகாலத்தில் நீரின்மையாலும் அல்லல்படுகின்ற விவசாயி தகுந்த காலத்தில் தகுந்த பயிர்களைச் செய்ய அரசு ஆதரவளிப்பதை நாம் காணவில்லை.

நல்ல சத்துள்ள —மக்கள் விரும்புகின்ற உருளைக் கிழங்கை இம்முறை யாழ்ப்பாண விவசாயியோ வன்னிப் பகுதி மக்களோ — நடுவதற்கு முடியவில்லை; அன்னியச்செலவாணி என்ற நிலையைக் காட்டி உருளைக் கிழங்கை போதியளவு இறக்குமதி செய்ய அரசு முன்வரவில்லை; யாழ்ப்பாணத்துக்கு மட்டும் என்ற அடிப்படையில் கால்வாசி அளவுகூடக் கிடைக்கவில்லை. மக்கள் பயிரிடக் கூடிய குறைந்த நாளில் அறுவடை பெறும் இப்பயிர் இனி அரசின் கட்டுப்பாட்டிலே இருக்கும்;

## பசளை

விவசாயிக்கு மிக முக்கியமான தேவை பசளையாகும். பசளையைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் யாரும் களிப்பு வடிப்பதாக நாம் இன்னமும் அறியவில்லை. தவிரவும் கள்ளக் கடத்தல் செய்வதாகவும் தெரியவில்லை; ஆனாலும் யாழ்ப்பாண விவசாயிகள் போதிய அளவு பசளைபெற முடியாதிருக்கிறார்கள். காசு கொடுத்து வாங்கும் பசளையைக்கூட நேரத்துக்கு அரசு தந்துஉதவுவதில்லை1973-74 காலபோக நெற் பசளைகள் இன்னமும் சகலருக்கும் வினியோகித்து முடியவில்லை. இதுதான் அரசினரின் உணவு உற்பத்திப் போராகும்

பயிர் செய்வதற்காக வழங்கும் கடன்கள் உரிய காலத்தில் கொடுப்பது கிடையாது. காலபோகநெற் கடனை கார்த்திகை மார்கழி மாதங்களில் கொடுத்தால் விவசாயியால் என்னசெய்ய முடியும். எல்லாவற்றிற்கும் ஐகரம் வைத்ததைப்போல பயிர்செய்பவனுக்குக் காணி கிடைப்பதில்லை; காடுகளை அத்துமீறி வெட்டிப் பயிரிட்டாலும் அவைகளில் பயிர்கள். கோழித்தீன் ஆட்டமாவு ஆகியது; தினசரி மரவள்ளி உண்ணும் நிலையால் வயிற்றோட்டத்துக்கும் காலராவுக்கும் ஆளாகினான்.

மிளகாயின்மூலமும் வெண்காயத்தின் மூலமும் தமிழர்கள் பணம் சம்பாதித்து விட்டார்கள் எனக் குமுறிய ஆட்சியாளர்களின் வங்கிகளில் தமிழர்களின் தங்க நகைகள் அடைக்கலம் புகுந்தன. கூலிவேலை செய்வோர் ஒரு நேர உணவுக்கும் வழியில்லாதிருந்தனர். அவர்களுக்கு அரசினரால் மரவள்ளித்தடியும், வற்றாளைக் கொடியும் வழங்கப்பட்டது. குறிப்பாக தமிழ் பகுதிகளின் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு தமிழர்களின் சேமிப்பு அழிந்தது;

---

**விவசாயிகளுக்கு உதவிபுரிவதில் வடக்கு தெற்கு என்று அரசாங்கம் பாரபட்சம் காட்டவில்லை என்று அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்த காணி விவசாய அமைச்சர் அடித்து முழக்கினார். ஆனால் யாழ்ப்பாண விவசாயிகள் படும்பாட்டை இக்கட்டுரையில் விவரிக்கிறார் தாமே ஒரு விவசாயியான இக்கட்டுரையாளர்.**

---

## உற்பத்திக்குப் போதிய வசதியின்மை

தமிழ் பகுதிகளில் உற்பத்திச் செலவு 3 மடங்காகி விட்டது. கூலியாட்கள் சம்பளம் அதிகரித்து விட்டது; அத்தோடு விவசாயி அன்றாட உணவுக்காக பாண் கியூக்களிலும், பல கடைகளிலும் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறான் அத்தியாவசியமான பசளை, எரிபொருள் தட்டுப்பாடும் அருவிலையும் அவனது வருமானத்தை விழுங்கி ஏப்பம் விட்டது. இன்று விவசாயியால் நிமிர்ந்து நடக்க முடியாமல் அழிக்கப்படுவது தமிழர்களின் நல்விதியைத்தான் குறிக்கிறது.

நாம் விரும்பும் விதைகள் தானியங்களுக்கு அரசினர் சொல்லுகின்ற தவணைகள் அப்பயிர்கள் பயிரிடமுடியாதகால நீண்ட தவணையாகும். சிலவகையானவிதைகள் தானியங்கள் அரசினரிடம் பெறவே முடியாதிருக்கிறது;

## தமிழ் மக்களின் ஊக்கம்

தமிழ் பேசும் மக்கள் உணவு உற்பத்தியிலே மிகப் பெரும்பான்மையான முதலீடுகளை முதலிடுகிறார்கள். இன்றைய நெருக்கடியிலும் மிகவேகமாக உணவு உற்பத்தியைச் செய்ய இயந்திரங்கள் அவசியமானதாகும், ராக்ரர்கள், தண்ணீர்ப்பம்புகள், மருந்து தெளிக்கும் ஸ்பிறேயர்கள், கிணறுகள், பசளைகள், கிருமிநாசினிகள், இப்படியாக பல வழிகளில் முதலீடு செய்கிறார்கள். இதற்குரிய பலன் அல்லது ஆதாயம் அவர்களுக்குக் கிடைத்ததாய் இல்லை;

தைப் படுத்தும் சபை அதிகாரிகளும் இருக்கப் போகிறார்களாம்;

தமிழாராய்ச்சி மாநாடு பரிசளிப்பு விழாவில் தமிழர்களுக்கு கிடைத்த சன்மானத்தை நீங்கள் மறக்க வேண்டாம். தமிழரசுக்காரன் அடிவாங்கித்தருகிறான் என்று ஒழிந்து கொண்டிருந்து கதறியவர்களும், தமிழ் விழா பார்க்க வந்ததால் அடிவாங்கி அல்லல்பட்டதை மறக்க வேண்டாம். தமிழ் என்றால் அடி! அதை எவன எச்சரித்தாலும் அடி, இதுதான் இன்றைய அரசின் நிலை, வெளிநாடுகளிலிருந்து வந்த அறிஞர்கள் தமிழ் பேசியதால் அவர்களுக்கும் அடி, இதை எமதினம் நினைவில் வைத்திருக்கட்டும்

## சேமியுங்கள்

அரைக் கொத்தரிசியானவுடன், அரிசி விலை 10 ரூபா வரையில் போனது சிங்களப் பகுதிகளிலிருந்து அரிசி அரை, அரைப் புசலாக வந்து கொண்டிருந்தது. அரிசிவாங்கச் சென்ற தமிழர்கள் விரட்டப்பட்டார்கள். அப்போது நெல் சந்தைப் படுத்தும் சபையைக் காணவில்லை; அன்று அந்த அரிசியை வாங்கி அரசு ஒருகொத்தாக தந்திருக்கலாம்; ஆனால் எமது பகுதிகளில் நெல் விளைந்ததும் இரண்டு கொத்து தருவதாக நெல் சந்தைப் படுத்தும் சபையும் அரசியல் அதிகாரியும் சொல்லுகிறார்கள்; இது வேடிக்கையான கதையல்லவா? எனவே தான் உங்கள் வசமுள்ள நெல்லை சேமித்து வைக்கும்படி அறிவுறுத்துகிறோம்.

நீங்கள் நெல்லை விற்று விட்டு பின்னர் ஒரு மூடை

---

# விரதம்

— எஸ். பி. கே. —

வெள்ளிக்கிழமை விரதம்
விடியுமுன்னர், அவள் எழுந்தாள்
முற்றம் பெருக்கி முடிய
பொழுது விடிந்தது;

பள்ளிக்குப் போகும் பிள்ளைகளுக்கு
பாண் இல்லை இன்று
என்ற எண்ணம் எழுந்தது
பங்கீட்டுக் கடையில்
முந்தாநாள் வாங்கிய மா
முடிந்து போயிற்று.

எது கேட்டாலும் இல்லையென்னாது தந்திடும்
எதிர்வீட்டு 'தங்கைச்சி'யிடம்
இரண்டு சுண்டு மா
இரவல் பெற்று —
முட்டுக்காய் தேங்காய் துருவி
பிட்டவித்துப் போட்டாள்.

பிள்ளைகள் போதாது போதாதென்ன
போதும் போங் கோ
பள்ளியில் 'பிஸ்கட்' தின்னலாம்
பகலுணவிற்கு ஓடி வாருங்கள்
சோறு தின்னலாம், என்றவள்
சுறுசுறுப்பாய் செயலில் இறங்கினாள்;

நாலு சுண்டு பச்சரிசி
நன்றாய்க் கழுவி உலையில் இட்டாள்
கடலைப் பருப்பை புதிய முறையில்
கறி சமைத்தாள்
பசளிக்கீரை —
பப்படம்......போதாது;

பாபு என்ற பொடியன்
பசளி தின்னான், பருப்பு என்றால் உசிர்"
மீதிவிடான்,
ஆதலால் —
பச்சடியும் கொஞ்சம்
அரைத் தெடுத்தாள்;

பொழுது நகர்ந்தது. நேரம்
பன்னிரண்டே முக்கால்
பள்ளிக்குப் போன பொடியள்
பசித்தோடி வந்தன.
வேலையை விட்டு "ஐம்மா" இருக்கும்
கணவனும் கண்ணுறங்கி எழுந்தான்
குளித்தான், குந்திவிட்டான்,
குழந்தைகளோடு.

எல்லாருக்கும் இலையில்
சோறிட்டாள்; சோர்விலாள்
தானும் உண்டாள்
போதாது போதாதென்ற
பிள்ளை கட்கும் —
போதும் போதுமென்ற
கணவனுக்கும் —
போட்டிட்டாள், அள்ளி அள்ளி

அவள் வயிறு...?
அரை வயிறு;

---

# தமிழ் பேசும் விவசாயிகளே தானியங்களைச் சேகரிப்பீர்!

தமிழ்பேசும் யாழ்ப்பாண விவசாயி இரத்தத்தை வியர்வையாக்கி நிலத்தில் பசுமைப் புரட்சி செய்கிறான்: இதை வாயால் புகழும் அரசினர் அவர்களுக்கு செயலில் செய்த உதவி என்ன? மிக ஆழமான நிலத்திலிருந்து நீர்ப்பாசனம்செய்கிறான். இதை வாயால் புகழும் அரசினர் அவர்களுக்கு செயலில் செய்த உதவி என்ன? மிக ஆழமான நிலத்திலிருந்து நீர்ப்பாசனம்செய்வதும், கூடுதலான முதலீடு செய்வதும் அத்தியாவசியமான பயிர்களை உண்டு பண்ணுவதும் யாழ்ப்பாண விவசாயியே! இன்று அவன் நிலை என்ன?

## பங்கீட்டரிசிக் குறைப்பு

மின்னமல் முழங்காமல் மழைபெய்ததுபோல இரவு விடிய அரைக்கொத்தாகியது அரிசி. வடமாகாணம் எப்போதும் நெல் விளையும் பிரதேசமல்ல — சிறுபோக நெல் வேளாண்மை அறுவடை செய்து விவசாய நெல்லை விற்றதின் பின்பு திடீரென அரசியல் அரிசியில் போனதால் அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஏழைத்தமிழர்கள் உணவையே மாற்றினார்கள். இப்போதும் உற்பத்தி ஆணையும் நெல் விளைச்சலையும் அரசினர் திட்டங்களில் பார்த்து அங்கலாய்ப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியே இல்லை; நீர் இறைத்து விவசாயம் செய்யும் எமது பகுதிகளுக்கு தண்ணீர் பம்பு கிடைப்பதில்லை; எரிபொருளை வாங்கிஇயந்திரத்தைஇயக்க இன்று முடியாத நிலையில் எப்படி உற்பத்தி வருமோ தெரியவில்லை!

## நெல் அறுவடையும் விற்பனையும்

தற்போது கால போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது இந்த நெல்லை கொள்வனவு செய்ய நெல் சந்தைப் படுத்தும் சபை தன்னைத் தயார் செய்துள்ளது!

வடமாகாணத்தில் எப்போதும் அறுவடை செய்யப்படுவதில்லை. சிறுபோகம் மிகக் குறைந்த அளவு (குளத்தில் நீர் இருந்தால்) செய்யப்படும். எனவே அறுவடை செய்த நெல்லை பொது மக்கள் மிகக் கவனமாக சேமித்து வைக்கப் பழக வேண்டும். அரசாங்கம் கொடூரமான சட்டங்களைக் கொண்டுவரலாம். ஆலை பிறவுத் தடையில் நெல் சந்நெல்லின் பணத்திலும் பார்க்க ஒரு புசல் நெல் அரிசியை கூடுதலான விலையில் வாங்க நேரிடும்; அடைவு கடைகளிலும் வங்கியிலுமுள்ள நகைகளை எடுத்து மீண்டும் அடைவு வைப்பதில் எதுவித நன்மையுமில்லை. முடிந்தால் [illegible]யைக் கட்டுங்கள்.

இனியும்ஒருமுறை அடைவு வைக்க எம்மிடம் சேமிப்பு இல்லை என்பதையும் மறவாதீர்கள் அத்தோடு அடுத்த வருடம் தான் நெல் அறுவடை செய்யமுடியும் என்பதையும் நினைவில் இருத்துங்கள் ஒவ்வொரு நாளும் உணவு தேவை என்பதையும் தற்போது அறிவீர்கள்.

## அரசியல் அதிகாரி உரை

இனிமேல் விதை நெல்லும் உரமும் இல்லை என அரசியல் அதிகாரி கூறிவிட்டார். அரசினரின் 5 ஆண்டுத் திட்டமும் உணவும் உற்பத்தியும் வெளிச்சமாகத் தெரிகிறது. எரிபொருள் விலை இப்படி இருந்தால் பயிர் வளருமா? பசிவளருமா? சிந்தித்து செயலாற்றுங்கள்.

உணவு வகைகளைப் பயிரிடுங்கள்.

தானியங்களைச் சேமியுங்கள்,

தமிழ் மக்களைக் காப்பாற்றுங்கள்.

முத்து- சுப்பிரமணியம்

# அரசு ஆதரவுடன் நடைபெறும் பௌத்தமத ஊடுருவல்கள்!

## ஏனைய மதத்தவர்கள் இவற்றை அனுமதிக்கலாமா?

ஈழத் தமிழர்களின் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியனவற்றின் தனித்துவத்தைச் சிதைத்து, தொன்மையை மறைத்து, சிங்களக் கலப்பினால் அவற்றின் பெருமைகளைக் குன்றச் செய்து, சுற்றில் தமிழர்களின் சமவுரிமைக் கோரிக்கைக்கு வலுவான ஆதாரங்களாக, முற்கூறியவற்றுடனும் இணைந்து விளங்கும் பிரதேசவுரிமை, சமயம் ஆகியவற்றையே அழிக்கும் பணியை இந்த நாட்டின் சிங்கள அரசாங்கமும், காவியுடை தரித்தோரின் பீடங்களும், கைக் கூலிகளும், எட்டப்பன் கூட்டங்களும், அந்நிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பொன்னம்பலம் இராமநாதனும், அருணாச்சலமும் முன்னின்று விடுதலைப் பணியாற்றி, நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த நாட்தொட்டு, திட்டமிட்டு செயலாற்றி வருகின்றன.

இவற்றின் சில விளைவுகளே தனிச் சிங்களச் சட்டம்; கல்லோயா, பதவியா சிங்களக் குடியேற்றத் திட்டங்கள்; சிங்களவர் அல்லாத ஏனைய இனப் பிள்ளைகளுக்கு, "பெற்றோர் விரும்பும் மொழியே" போதனை மொழி என்ற பிடிவாதமான கொள்கை: தமிழ் நாட்டில் இருந்து வரும் கலைஞர்களுக்கும், பெரும்பாலான பத்திரிகைகள், நூல்களுக்குத் தடையும், சிலவற்றிற்குக் கட்டுப்பாடும் என்பன.

### சமயம்

சமயத்தைப் பொறுத்த வரையில், முதலில் சமய வழிபாட்டு உரிமைகளை மறுக்கும் போக்கில் இந்துக்களின் புனித பிரதேசமாக, திருகோணமலையின் ஒரு பகுதியை, பாடல்களால் பாடப்பட்ட புனிததலமான கோணேசுவரமலைப் பூமியை பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையைப் புறக்கணித்து, மாறாக அங்கு சிங்களவர் இச்சை பேணும் இராணுவத்தை முகாமிட வைத்து, புத்தருக்கே தமது ஆயுதப்பாதுகாப்பு தேவையென்ற தோரணையில், பொது மக்களின் பணத்தில் புத்தர் சிலையும் தாபித்து அதனை புத்தமதத்தவர்களின் இன்னொரு வழிபாட்டுத்தலமாகவும் சிறிதுசிறிதாக மாற்றி வருகின்றனர்.

இலட்சக்கணக்கான இலங்கையர் அருளும், வரமும் நாடி யாத்திரை செய்யும் மருதமடுமாதா திருப்பள்ளி கொண்டெழுந்தருளி இருக்கும் மடுத்திருப்பதியை கத்தோலிக்கரின் வேண்டுதலுக்கிணங்க புனித நகராகப் பிரகடனப்படுத்தும் எண்ணமும் அணுவளவேனும் கிடையாது. இத்துடன் நில்லாது, தமிழர்களின் ஒற்றுமைக்கு உலைவைத்து, இதுகாலும் இருந்து வந்த சாதிப் பிரச்சினையைப் பயன்படுத்தி சிறுபான்மைத் தமிழர்களைப் பௌத்தர்களாக மாற்றும் கைங்கரியத்திலும் ஈடுபடலாயினர்.

### ஊடுருவல்

இந்த வழியில் ஈழத் தமிழர்களின் தலைநகரான யாழ் நகரில் உள்ள நாகவிகாரைக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவத்தைச் சிங்கள அரசு அளித்து வருவது தெரிந்ததே.

திருக்கோணமலையில் சேருவிலைக்கு எப்படித் திடீர் 'மவுசு' ஏற்பட்டதோ அதே போக்கில் இந்த நாகவிகாரையையும் பௌத்தர்களின் 'திடீர்' முக்கிய யாத்திரைத் தலமாக்க இந்த சக்திகள் முயன்று வருகின்றன.

யாழ் தமிழர்களின் பிள்ளைகள் இன்று சிங்கள மகா வித்தியாலங்களில் பயிலும் ஈனச் செயலுக்கு இதே விகாரையின் காப்பாளர்கள் எந்தளவுக்குப் பொறுப்பானவர்கள் என்பது யாழ் தமிழர் அறிந்ததே.

இவர்களின் ஊடுருவல் போக்கில், இந்துக்களும், கத்தோலிக்கரும் முற்காலச் சரித்திரபூர்வமான ஆதாரங்களை முனைவைத்து, சமயத் தலங்களுக்கு உரிமைகோரத் தலைப்பட்டால், அன்றாடங் காய்ச்சிகளான பிரசைகளின் வரிப் பணத்தையும், பல இலட்சங்களாக ஏப்பம் விட்டு, பௌத்தர்களின் புனித நகராகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் அநுராதபுரம் இன்னொரு ஜெருசலேம் நகராகும் என்பது திண்ணம்.

### யாத்திரிகர் மடம்

நிலைமை இவ்வாறு இருக்க சமய, பிரதேச ஊடுருவலைத் தீவிரப்படுத்துவதில் மேலும் ஒரு படியாக, நாகவிகாரைக்கு அண்மையில் பௌத்த யாத்திரிகர்களின் 'நலன்'கருதி ஐந்து லட்சம் ரூபா செலவில், மூன்றடுக்குக் கட்டடம் ஒன்று, "யாத்திரிகர்கள் தங்கு மடம்" கட்டுவதற்குக் கலாச்சார அமைச்சு தீர்மானித்து, செலவில் 'ஒரு பகுதியை மட்டும்' பொதுமக்களிடம் இருந்து நேரடியாக நன்கொடை மூலம் திரட்டும் பணிக்கு, யாழ் அரசாங்க எண்ணிக்கையை, மற்ற சமயத்தலங்களுக்கு யாத்திரை செய்பவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, இந்த யாத்திரை மடத்திற்கு அப்படியென்ன அவசரமும், அவசியமும் எழுந்துள்ளது என்பது நாம் அவர்களை நோக்கி விடுக்கும் கேள்வி.

### எதிர்ப்பு காட்டுக

பௌத்த சமயத்தை வளர்ப்பது அரசாங்கத்தின் கடமை என்ற போர்வையில் (சிங்கள) கலாச்சார அமைச்சு எடுக்கும் நடவடிக்கைக்கு நாம் காட்டும் எதிர்ப்பு பல விடங்களின் பிரதிபலிப்பாகும். தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட ஓரின, மதசார்பான புதிய அரசியற் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் இந்த நடவடிக்கையை எதிர்ப்பதன் மூலம், அரசியற் சட்டத்திற்

## பெஞ்சமின் இராசரத்தினம் ஜோர்ஜ்

அதிபரை பொறுப்பாக்கியுள்ளது. (இலங்கை ஒலிகூட். தாபனச் செய்தி அறிக்கை: 20-2-74.)

சிங்கள அரசின் இந்த நடவடிக்கை அதன் அடிப்படை நோக்கமான, ஒரே சமயம் —பௌத்த சமயம், ஒரே இனம் — சிங்கள இனம் (அதாவது கலப்புச் சிங்கள இனம்) கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவதின் இன்னொரு படி.

நாகவிகாரைக்கு யாத்திரை செய்பவர்களின் ...

கும் மேலும் ஒரு வகையில் நமது நிராகரிப்பைத் தெரிவிக்க ஏதுவாகும்.

ஆகவே சமய அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும் இந்த நடவடிக்கைக்கு தம்மில் பொறுப்பான நிலைகளை வகுப்பவர்கள், முட்டுக்கட்டைபோட உடன் செயலாற்ற வேண்டும்.

சமயத் தலைவர்களும், பரிபாலன சபைகளும் தக்க காரணங்களை மேற்கோள் காட்டி, கண்டனக் குரல் எழுப்ப வேண்டும். தமிழ் நா. உ. க்களும் தேசிய அரச பேரவையில் குரலெழுப்பட்டும்.

### கம்யூனிஸ்டுகளே உங்கள் வழி இதுதானா?

''இரந்து முயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற் றியான்.''

என்றனன் தமிழ் கூறு நல்லுலகம் போற்றும் செந்நாப் புலவன். ஆனால் சோசலிசம் பேசப்படும் இந்த நாட்டிலோ ஒரு வேளை உணவுக்குத் தானும் தொழிலாளியும் அவன் மனைவி பிள்ளைகளும் பரிதவிக்கையில், ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் வரிப்பழுவைச் சுமத்தும் சோசலிச அரசாங்கம், பல இலட்சங்களை நூற்றுக் கணக்கில் நாடெல்லாம் 'விழலுக் கிறைத்து' அரசமரம் கண்ட இடத்தில் எல்லாம் விகாரைகளும் சின்னங்களும் எழுப்பும் ''புண்ணிய கருமங்களை'' காணீரோ? சோசலிச அரசின் பாதந்தாங்கிகளான — நேர்மையுள்ள—நேர்மையில்லாத — கம்யூனிஸ்ட் குஞ்சுகளே! இதுதான் உங்கள் லெனின், மார்க்சு தத்துவங்களை உங்கள் தலைவர்கள் கடைப்பிடிக்கும் சீரிய வழியோ?

இதற்குச் செலவழிக்கும் ஐந்து இலட்சத்தை யாழ் உல்லாசப் பிரயாணத்துறையை விருத்திச் செய்ய பயன்படுத்தினாலும் நாட்டிற்குக் குவியும் அந்நிய செலவாணி வருமானம் எவ்வளவு அதிகரிக்கும் என்பது இரட்டைக் கலாநிதிகளின் தங்க மூளைக்குத் தட்டுவதில்லையோ? இத்தகைய பரந்த மனப்பான்மை கடந்த காலத்தில் அற்று போனது. தானே இன்றைய நமது பொருளாதார வீழ்ச்சிக்குப் பெருங்காரணம்!

ஆமாம், சமய யாத்திரை செய்பவர்கள் தெய்வ தரிசனத்திற்கு வருகிறார்களா உல்லாச யாத்திரை வருகிறார்களா?

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**639-வது நாள்**

## வள்ளுவருக்கு தபால தலை வெளியிடுக!

வள்ளுவர் நினைவாக தபால் தலையொன்றை வெளியிடும்படி இலங்கை அறிவு இயக்கம் தபாலமைச்சரிடம் கோரியுள்ளது. வள்ளுவருக்கு தபால் தலை வெளியிட வேண்டுமென்னும்தீர்மானம் அறிவு இயக்கத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சரசுவதி மண்டபத்தில் நடத்தப்பட்ட வள்ளுவர் விழாவில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

'வள்ளுவம்' பற்றி அறிவகத்தினர் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசான தங்கப்பதக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஐ. வடிவாம்பாளுக்கு கிடைத்துள்ளது. ஆறுதல் பரிசு பெற்றோர் வருமாறு:—

செல்வி ரேணுகா வில்லவராயர் (சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு 6) செல்வி மகேஸ்வரி செல்லத்துரை (உடுப்பிட்டி மகளிர் பாடசாலை) செல்வன் இ. அருள்வேல் ராஜா (கொட்டாஞ்சேனை மகாவித்தியாலயம்) செல்வி கு. அருள்மொழி (நயினாதீவு மகாவித்தியாலயம்) செல்வி பவானி சுப்பிரமணியம் (வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்) செல்வி ப. பரிமள காந்தி (கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயம் ஊர்காவற்றுறை) செல்வி இரதி சிற்றம்பலம் (மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை) செல்வன் வ. தர்மராஜா (வாழைச்சேனை மகா வித்தியாலயம்) செல்வன் சு. செகராஜலிங்கம் (யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை) செல்வி சியாமளா குமாரி குமரப்பபிள்ளை (வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

## கண்ணீருக்கு காலம் பதில் சொல்லும்!



ஆறே ஆறு வயதுப் பிஞ்சுக் குழந்தை — அழகுத் தமிழில் மழலை பேசும் அன்புச் செல்வி — 'பத்மஸ்ரீ' இன்னும் அப்பா எங்கே எங்கே என்று கேட்டுக்கொண்டேயிருக்கிறாள்.

வாழ வேண்டிய வயது— வாழ்க்கையை சுவைக்க வேண்டிய பருவம் — இந்த இளம் வயதில் அன்புச் சகோதரி சாரதாதேவி மஞ்சளையும் பூவையும் பொட்டையும் மாங்கல்யத்தையும் இழந்து கண்ணீர் வடித்தபடி இருக்கிறார்!

இந்தப் பரிதாபத்துக்குரிய குடும்பத்தின் தலைவன் பெயர் வைத்திய நாதன் யோகநாதன். வயது ஆக 32. கொடிகாமத்தில் வசித்து வந்தவர்: பளையில் அரசு அலுவலராகப் பணியாற்றி வந்தவர்.

தமிழாராய்ச்சி மாநாட்டில், வெளிநாட்டுத் தமிழறிஞர்களின் சுவையான தமிழைக் கேட்டு வருகிறேன் என அருமை மனைவியிடமும், அன்புமகளிடமும் முதல் நாள் விடைபெற்றுச் சென்றவர், மறுநாள் உயிரற்ற பிணமாக அவர்களிடம் கையளிக்கப்பட்டார்.

வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் சனவரி 10ம் நாள் நடைபெற்ற கொடூரத்தின் விளைவாக யோகநாதன் தமிழுடன் சங்கமமாகினார். அன்புடன் வாழ்ந்த இளம் குடும்பம் கண்ணீர் வெள்ளத்தில் மிதக்கிறது.

வைத்திய நாதன் — தென்னுமணிப்பிள்ளை ஆகியோருக்கு பிறந்த யோகநாதனுக்கு 4 சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு.

நிறைந்த தமிழுணர்ச்சி மிக்க யோகநாதன், தமிழ் மொழி சம்பந்தப்பட்ட கூட்டங்கள் எங்கு நடைபெறினும் அவற்றில் கலந்துகொள்ள முன்னிற்பவர். இறுதியாக தமிழுக்கே தன்னுயிரைத் தந்துவிட்டு தியாக வரலாற்றில் இடம் பிடித்து விட்டார்.

எங்கள் அப்பா தமிழுக்காக உயிரைத் தந்தவர் என்று குழந்தை பத்மஸ்ரீ பெருமையுடன் எதிர் காலத்தில் கூறக்கூடிய நிலையில் சாவை அணைத்துக் கொண்ட தியாகி யோகநாதனின் இளம் மனைவி இன்று வடிக்கும் கண்ணீருக்கு காலம் நிச்சயம் பதில் சொல்லியே தீரும்!

## ஈழத் தமிழர் நெஞ்சில் கொழுந்து விட்டெரியும் எதிர்ப்புக் கனல்!

அயல்மொழி ஒன்றின் ஆதிக்கக் கொடுங்கரம் வரம்பு மீறி நீண்டிடும்போது, ஓர் இனத்தவரின் வாழ்க்கையையே அது பறித்திடும்பொழுது — அதனை முறியடித்திட எதிர்ப்புக்கனல் மூண்டெழுவது இயற்கையே!

அத்தகைய கனல் இங்கு மட்டுமல்ல உலகின் பல்வேறு பகுதிகளிலும் அவ்வப்போது கொழுந்து விட்டுத்தான் எரிந்து வந்திருக்கிறது.



ஆங்கில ஆதிக்கத்தை விரட்டியடித்து விடுதலை பெற்றிட அயர்லாந்து மக்களைத் திரண்டெழச் செய்ததும் அந்த எதிர்ப்புக் கனல் தான்!

பாகிஸ்தானின் ஆதிக்கத்திலிருந்தும் தங்களை விடுவித்துக் கொண்டிட வங்கதேச மக்களை பொங்கியெழத் தூண்டிவிட்டதும் அந்த எதிர்ப்புக்கனல்தான்.

வனமெலாம் மலிந்து முன்பேவலிமைபெற்றுத்திகழ்ந்திட்டஅமெரிக்காவுக்கே அறைகூவல் விடுத்திடும் வண்ணம், சாதாரண தொழிலாளர் இயக்கத்தாலே உருவெடுத்த சோவியத் ரஷ்யாவை ஒரு வல்லரசுக் கோட்டையாகவே வளர்த்துக் காட்டிய ஸ்டாலினை முதல் முதல் பொது வாழ்க்கையில் ஈடுபடுத்தியது எது? தம்முடைய தாய்மொழியாம் ஜார்ஜிய மொழியை இன்னொரு மொழி இரண்டாம் தரம் ஆக்க விடுவதா என்கிற எதிர்ப்புக்கனல்தான்.

இன்றைக்கு, ஏன் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கூட, ஈழத் தமிழர் நெஞ்சங்களிலே கொழுந்து விட்டெரிவதும் அதே எதிர்ப்புக்கனல்தான்!

—'தினமணி கதிர்' நெஞ்சுக்கு நீதி கட்டுரையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், கருணாநிதி.

# திருக்குறளும் - அதன் மொழிபெயர்ப்புக்களும்!

நான்காவது அனைத்துலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களால் படிக்கப்பட்ட கட்டுரையின் முதல்பகுதி இங்கு இடம் பெற்றுள்ளது. — ஆர்

பண்டிதர்
## கா.பொ.இரத்தினம்

திருக்குறள் பலதுறைகளில் ஒப்புயர்வற்ற பெருநூலாகவும் தனிச் சிறப்புகள் பலவற்றைக்கொண்ட தமிழ் மறையாகவும் விளங்குகின்றது. இது ஒரு சமய நூலன்று; எனினும் உலகப்பொதுமறை எனவும் போற்றப்படுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டதெனினும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதை நிலை நாட்டி சமவாய்ப்புச் சம உழைப்புச் சமநீதிச் சம வாழ்வுச் சமுதாயத்தை உருவாக்கும் வழியை வகுத்துக் காட்டுகின்றது; மனிதகுலத்தின் சாதிமதகுல நிறவர்க்க பொருளாதார வேறுபாடுகளை அகற்றும் நெறியை விளக்குகின்றது; உறுதியான உழைப்பினால் எவரும் எண்ணியவாறு பெறலாம் என்பதை வலியுறுத்துகின்றது. மக்களைச் சுரண்டிவாழும் புல்லுருவிகளுக்கும் பச்சோந்திகளுக்கும் மானம் இழந்து மாற்றாரை மண்டியிட்டு அண்டிப்பிழைப்போருக்கும் உய்யும் வழியை உரைக்கின்றது.

### பதின்மர் உரை

இத்தகைய சிறப்புகளால் திருக்குறள் தமிழ் அறிஞர்களையும பிறநாட்டறிஞர்களையும் ஈர்த்து இன்புறுத்தியுள்ளது. திருக்குறளிலும அதன் ஆசிரியர் திருவள்ளுவரிடத்தும் பேரார்வம் கொண்ட மக்கள் தங்கள் ஈடுபாட்டைப் புலப்படுத்தித் திருக்குறளுக்குப் பத்துக்கு மேற்பட்ட பெயர்களை இட்டனர். திருவள்ளுவருக்கும் தெய்வப்புலவ முதலிய பல பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர்; திருவள்ளுவருக்குக் கோவில் எழுப்பினர்.

திருக்குறளின் கருத்தாழத்திலும் சொற்றிறனிலும் தோய்ந்த அறிஞர் பெருமக்கள் தம் சிந்தனைகளுக்கேற்ப பல உரைகளை எழுதிப் பணிபுரிந்தனர்; பதின்மர் எழுதிய உரைகளின்பின் இன்றுவரையும பல புத்துரைகளை எழுதி வெளியிட்டுளர்.

### அண்ணாவின் தொண்டு

திருக்குறள் கருத்துக்களை விளக்குதற்குத் திருக்குறள்களை ஈற்றடிகளாக வைத்துச் சோமேசர் முதுமொழி வெண்பா போன்ற பல நூல்கள் பாடப்பட்டன. திருவள்ளுவரின் பெயரையும திருக்குறளின் பெயரையும் பூண்ட பல கழகங்கள் பல நாடுகளில் பணிபுரிகின்றன; பல ஏடுகளும் திருவள்ளுவரின் பெயரையும் திருக்குறளின் பெயரையும் தாங்கி வெளிவந்துள. திருவள்ளுவர் தொடர் ஆண்டினையும் இன்று தமிழ் கூறு நல்லுலகம் வழங்கத்தொடங்கியுளது.

திருக்குறளின் திறனாய்வும் சொல்லாராய்ச்சியும பிற இயல்புகளும் குறித்து எழுதப்பட்ட நூல்கள் பலவாகும். தமிழில் வேறு எந்த நூல்குறித்தும் இவ்வளவு தொகையான ஆராய்ச்சி நூல்கள் தோன்றவில்லை. பிறமொழிகளிலுள்ள நூல்களிலும் இவ்வளவு தொகையான ஆராய்ச்சி நூல்கள் தோன்றுதற்கு மக்களிடையே ஆர்வத்தை வளர்த்துவரும் இலக்கிய நூல் ஒன்றேனும் இல்லை எனலாம்.

தமிழ் நாட்டிலுள்ள சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் எனும் மூன்று பல்கலைக் கழகங்களிலுமே திருக்குறள் ஆராய்ச்சிக்குத் தனித்துறைகளை தமிழினத்தின் தனிப் பெரும் தலைவரும் தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான மறைந்த பேரறிஞர் அண்ணாதுரை நிறுவியிருக்கிறார். பல்கலைக் கழகங்களில் இத்தகையதொரு பெருமையை உலகத்தில் வேறெந்த நூலும் பெறவில்லை. இந்தப் பெருமையை ஆக்குதற்கு அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே காரணம் என்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்: சென்னை மாநாகரில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலேயே இந்த அரும்பெரும் பணியைச் செய்தற்குமுடிவு செய்திருப்பதாக பேரறிஞர் அண்ணாதுரை அவர்கள் அறிவித்தார்கள்.

### சுவைட்சர் கருத்து

இவ்வாறு தமிழ் மக்களையும் தமிழ்ப் புலவர்களையும் தமிழ் அமைச்சர்களையும் மட்டும் திருக்குறள் ஆட்கொள்ளவில்லை. பிறநாட்டு நல்லறிஞர்களையும் அது ஈர்த்து ஈர்த்து இன்புறுத்தியது. தமிழைக் கற்றுத் திருக்குறளைப் படித்த பிறமொழியாளர்கள் மட்டுமன்றித் திருக்குறள் மொழிபெயர்ப்புகளைக் கற்றவர்களும் திருக்குறளில் எல்லையில்லா ஈடுபாடுகொண்டார்கள்.

டபிள்யு. எச். இடுறு, எலிசாகூல், சி. யு. போப், சாரீஸ்சு, ஈ. கவர், ஈ. சேத் உரெபின்சன், கால்டுவெல், எம். ஏரியல், கிரௌல், பிறடெறிக் பின்காட், பார்சிவல், வின்டர்னிட்சு, சே: லாசரசு, ஏ. கிருன்று எலிசாகூல், அலெக்சாண்டர் பியாரிகோர்சுக்கி, மோங்குமண, மனமோகன கோசு முதலிய பிறநாட்டுப் பேரறிஞர்கள் திருக்குறளைப்பற்றிக் கூறியுள்ள கருத்துக்களைப் படிப்பவர்களின் உள்ளம் பேருவகைக் கடலில் திளைக்கும்; கட்டுப்படுத்தமுடியாத பெருமிதம் அடையும். திருக்குறளின் சிறப்பியல்புகளை திறம்பட நுனித்தாய்ந்து உரைத்த அல்பேட் சுவைச்சர் எனும்பேரறிஞர் 'திருக்குறளுக்கு இணையான ஞானநூல்—வாழ்வுநூல் உலகில் இல்லை' என்று அறுதியிட்டுரைத்துளர்.

### மொழி பெயர்ப்புப்பணி

தமிழகம் உலகத்துக்குக் கொடுத்த ஈடிணையற்ற பெரும செல்வம் திருக்குறளேயாகும். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பெருமிதத்துடன்பாடினர் பாரதியார். இன்று வள்ளுவர் தந்து வான்மறை உலகமெங்கும் பரவிவருகின்றது. திருக்குறளின் ஒப்புயர்விலாப பெருஞ்சிறப்பை உணர்ந்த பிறநாட்டு மக்கள் தம்நாட்டு மக்களும் பயன்பெறுதற்காக அதனைத் தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்துளர். இம்மொழி பெயர்ப்புபபணி தொடர்ந்து நடைபெறுவது பாரதியாரின் வாக்கை மெய்ப்பிக்கின்றது. இன்றுவரை செய்யப்பட்ட திருக்குறள் மொழிபெயர்ப்புக்களின் விபரங்களை ஈண்டுத் தொகுத்து ஆராய்வோம்:

—வளரும்

## மலையகத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி).

கொண்டு, வடக்கு, கிழக்கு மாகாணத்தமிழர்கள் இனியும் பொறுமையுடன்இருக்க முடியாது. தோட்டங்களில் போதியளவு உழைப்பின்றியும், உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்றியும, உண்ண உணவின்றியும், விவசாயம் செய்யவும் குடியிருக்கவும் நிலமின்றியும் அவதிப்படும் மலையகத்தமிழர்களை வடக்கு, கிழக்கில் குடியமர்த்தி அவர்களுக்கு வாழ்வு கொடுப்போம். இதுவே தமிழர் கூட்டணியின் உடனடிக் கடமையுமாகும்''

—இவ்வாறு, மாவிட்டபுரத்தில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசிய தமிழரசுத்தலைவரும் தமிழர் கூட்டணிச் செயலாளருமாகிய அ அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

''தோட்டத்தொழிலாளர்களுக்கு உணவு கொடுக்காமலும் உணவுப் பொருட்களைப் பயிரிட நிலம் கொடுக்காமலும் அவர்களைப் பட்டினி போட்டுச் சாகடிப்பது ஒரு 'இனக்கொலைக்கு' சமமாகும். இப்படிப் பட்டினியால் யாராவது இறந்தால் — இறந்திருந்தால் — அது இயற்கை மரணமல்ல — அது கொலையாகும்''

— மேற்கண்டவாறு சட்டத்தரணியும், இலங்கை வர்த்தக ஊழியர் சங்க செயலாளருமான திரு பாலதம்பு தலவாக்கொல்லையில் நடைபெற்ற இலங்கைத் தோட்டச்சேவையாளர் சங்கத்தின் கூட்டமொன்றில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளதும், இங்கு குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் அவர் கண்ட உண்மை!

காஷ்மீரில் ஒருசட்டம் இருக்கிறது. இங்கு காஷ்மீரிகள் அல்லாதஎவரும் நிலம் வாங்க முடியாது. வெளியூரார் எவருக்கும் நிலம் விற்கவும் முடியாது. காஷ்மீர் நிலம் முழுவதும் காஷ்மீரிகளுக்கே இப்போது சொந்தமாகும்; எதிர்காலத்திலும் அது காஷ்மீரிகளுக்கே சொந்தமாக்கப் பட வேண்டும். காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்திருந்தாலும் கூட, காஷ்மீரி அல்லாத வேறு பகுதி இந்தியர் தானும் இங்கு நிலம் வாங்க முடியாது. இப்படிக் கூறினர் சுல்தான்.

தமது நிலத்தைத் தமக்கும் தமது சந்ததியினருக்கும் பாதுகாத்து வைப்பதில் காஷ்மீரிகளுக்கு உள்ள பிடிப்பை உணரலானேன். உண்மைதான்; நிலம் பறிபோய் விட்டால், பின்னர் இனம் அழிந்து போகும். நிலத்தைக் காப்பதன் மூலந்தான் இனத்தைக் காக்க முடியும், மொழியைக் காக்க முடியும், மதத்தையும் கலை கலாசாரங்களையும் காக்க முடியும் என்று காஷ்மீரிகள் உணர்ந்திருக்கிறார்கள்.

—எஸ். டி. சிவநாயகம்
('சிந்தாமணி' தொடர் கட்டுரையில்—10-3-74)

# புங்குடுதீவுஇளந்தமிழர்மன்ற எட்டாவது ஆண்டுவிழா!

'அக்கிரமங்கள் அநியாயங்கள் போன்றவற்றை தமிழர்கள் நெடுங்காலம் பொறுத்திருக்க மாட்டார்கள் என்பதை சங்ககால இலக்கியங்களும் புராண இதிகாசங்களும் எடுத்துக்காட்டுகின்றன. துன்பங்களையோ துயரங்களையோ கண்டு தமிழர்கள் கிஞ்சிற்றும் கலங்கக்கூடாது. இடுக்கண் வருங்கால் நகுக என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மறை தந்த வள்ளுவன் சொன்னதை தமிழர்கள் கடைப்பிடிக்க வேண்டும். தமிழினத்தின் எதிர்காலம் இளந் தமிழர்கள் கையிலேயே தங்கியுள்ளது.

—புங்குடுதீவு இளந் தமிழர் மன்ற எட்டாவது ஆண்டு நிறைவு விழா ஊரதீவிலமைந்த வன்னிய சிங்கம் அரங்கில் நடைபெற்றபோது மன்றக் கொடியை ஏற்றி வைத்துரையாற்றுகையில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்றத் தலைவரும் சட்டக்கல்லூரி மாணவருமான திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி கதிரவேலுப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். ஊரதீவு தமிழ் மாதர் கழகத்தினரால் மன்றக் கீதமிசைக்கப்பட்டது.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட திருவாளர்கள் எஸ். தம்பித்துரை, கா. பொ. இரத்தினம் பா. உ. திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், சமுவேந்தன் கரிகாலன், ஆகியோருடன், செ. தில்லைநாதன், இ. நா. பாலசிங்கம், பண்டிதர் வி. வ. நல்லதம்பி, ஐ. குலேந்திரன், எஸ். கே. சிறீஸ்கந்தராசா, செல்வி. இ. மனோராணி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## அனுதாபம்

முந்நாள் யாழ்ப்பாண—தென்னிந்திய திருச்சபை அத்தியட்சகர் வண. கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்களின் துணைவியார் திருமதி அலிஸ் மதுரம்மா குலேந்திரன் அண்மையில் காலமானார். துணைவியாரைப் பிரிந்த வண. குலேந்திரன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆர்.

## தமிழ் இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

— இத்தகவலைத் தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகமும், தமிழரசுக்கட்சித் தலைவருமான நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள், மாவிட்டபுரத்தில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் வெளியிட்டார்.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைஞர் தலைவர் திரு. சோ. சேனாதிராசா 1973ம் ஆண்டு மார்ச் 9ம் நாள் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. இவ்வாண்டு மார்ச் 9ம் நாளுடன் அவர் கைது செய்து சிறையிலடைக்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றது.

இப்படி, ஆண்டுக் கணக்காக எதுவித விசாரணையும் விடுதலையுமின்றி திரு. சேனாதிராசாவையும் ஏனைய தமிழ் இளைஞர்களையும் சிறைகளில் அடைத்து கொடுமைப்படுத்துவதைக் கண்டித்தும், இவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், சேனாதிராசா கைது செய்யப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்ற மார்ச் 9ம் நாள் மாவிட்டபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தமிழர் கூட்டணியின் சார்பில் சட்டத்தரணி அ. குமரகுரு தலைமையில் ஓர் கண்டனக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பேசுகையிலேயே தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

## அபியுக்தனுக்குப் பதில்

தினகரன்
'அபியுக்தனுக்கு'
சட்டக்கல்லூரி
மாணவர்களின்
சூடான பதில் —
அடுத்த வார
சுதந்திரனில்
இடம் பெறுகிறது.

## இளம் திராவிட முன்னேற்ற கழகத்தின் கண்டனக் கூட்டம்!

யாழ்நகரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்த தமிழர்களுக்கு அனுதாபம்தெரிவித்து16-3-74ல் கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் இளம் திராவிடமுன்னேற்றக் கழகம் ஓர் பொதுக்கூட்டத்தை நடத்துகிறது. கூட்டத்துக்கு மேற்படி இளம் திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. ப. கே. பாலசுப்பிரமணியம் தலைமை வகிக்கிறார்.

பொங்கு
தமிழருக்கு
இன்னல்
விளைத்தால்
சங்காரம்
நிசமென
சங்கே முழங்கு

— பாரதிதாசன்


## நாவலர் நீதி வாக்கியங்கள்

சைவசமயிகளே, உங்கள் கோவில்களிலே பொதுமக்களுடைய நடன சங்கீதம் வாண விளையாட்டு முதலியவைகளை ஒழித்து விடுங்கள். திருவாணமாயும் காமத்தை வளர்த்தற்கு ஏதுவாயுமுள்ள பிரதிமைகளையும் படங்களையும் அமைப்பியாதொழியுங்கள். கோயில்களிலே சைவப்—பிரசங்கம், வேத பாராயணம், தேவார திருவாசக பாராயண முதலியவைகளைச் செய்வியுங்கள். இலமையுள்ள கோயில்களைப் புதுக்குவியுங்கள். நித்திய பூசைக்கு முதற் பொருள் சேருமுன் கோயில் கட்டுவிக்கத் தொடங்காதொழியுங்கள், நித்திய பூசைக்குப் பொருள் இல்லாத கோயில்களிலே இடம்ப நிமித்தத் திருவிழாவைத் தொடங்காது நித்திய பூசையைக் கிரமமாக நடத்துவியுங்கள்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி நாவலர் நீதி வாக்கியங்கள் என்ற புத்தகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கிட, தென்னவன் அவையில் அநீதியைச் சாடி—நீதியைச் கோரி — கற்பின் செல்வி கண்ணகி வாதாடி நிற்கின்ற அந்தக் காட்சி அனைவர் உள்ளத்தையும் தொ[illegible]க் கூடிய தாக அமைந்திருந்தது.

ஏலேல சிங்க மன்னனின் முன்னே அந்தக் கவிஞன்—திரைபோட்டிருந்து தமிழ் பாடிய வரலாறு, இலை எடுத்த சிற்பிக்கு விலை கொடுத்த வேந்தனின் வரலாறு—தன்னுடைய அரியணையிலே தமிழ்ப் புலவர் ஒருவர் அமர்ந்து, அயர்ந்து, தூங்குவதைக் கண்ட தமிழ் மன்னன் ஒருவன், அந்தப் புலவருக்கு சாமரை வீசிய வரலாறு—இது போன்ற பழந்தமிழிலக்கியங்கள் கூறும் சுவையான வரலாறுகளைச் சுமந்தபடி வந்த காட்சி வண்டிகளின் பின்னல்—

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சியும், விடுதலைக் கவிஞன் பாரதியும் வந்து கொண்டிருந்தனர்.

கப்பல் கட்டுவதிலும் கப்பலோட்டுவதிலும்; ஈழத் தமிழர்களும் சோடை போனவர்கள் அல்லர். வ. உ. சியைப்போலவே ஈழத் தமிழர்களும் கப்பலோட்டியவர்கள்; அதுவும், வெளிநாட்டார் வியந்து பாராட்டும் வகையில் இங்கு கப்பல்கட்டி அதை இங்கிருந்து அமெரிக்காவரை ஓட்டிச்சென்றவர்கள் நம் ஈழத்தமிழகத்தின் வல்வெட்டித்துறை மக்கள்; என்பதை வரலாற்று ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டும் வகையில் 1936ம் ஆண்டு அமெரிக்காவுக்கு சென்ற 'அன்னபூரணி' எனும் கப்பலின் அழகான தோற்றத்தைத் தாங்கியபடி வந்த காட்சி வண்டி பார்த்தோர் உள்ளங்களை அதிசயத்தில் மூழ்கடித்தது. ஈழத்தமிழர்களின் ஆற்றலையும் திறனையும், 'அன்னபூரணி' கப்பல் வெளிநாட்டு போறிவாளருக்கு எடுத்துக் காட்டியபடி இருந்தது.

இந்த ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்ட காட்சிகளில்—குறிப்பிடக்கூடிய மற்றொன்று பனையாகும். வேண்டுவார் வேண்டுவதெல்லாம் ஈந்திடும் யாழ்ப்பாணத்தின் தேசிய விருட்சமாகிய பனையையும், அப்பனையின்கீழ்பனையிலிருந்து பெறப்படும் பயன்களையும் சித்திரித்துக் காட்டிய படி வந்த ஊர்தியும் பார்[illegible] உள்ளங்களை கொள்ளை கொள்ளத் தவறவில்லை.

இவ்வாறு ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட காட்சி வண்டிகள் — தமிழர் வரலாறு, மொழி, இலக்கியம், கலை, கலாசாரம், வாழ்க்கை முறை போன்ற பல்வேறு துறைகளையும் எழிலுடன் சித்திரித்துக் காட்டி எழுச்சியை ஏற்படுத்தி —, ஈழத்தமிழ் மக்களை சிந்திக்க வைத்தது!

காலை 11 மணியளவில் தொடங்கி யாழ் மாநகரின் பல்வேறு வீதி வழியாகவும் சுமார் 25 மைலைச் சுற்றி வந்து இரவு 9 மணியளவில் மாநாடு நடைபெற்ற யாழ் வீரசிங்கம் மண்டப வாசலை வந்தடைந்த காட்சி வண்டிகளின் இந்த ஒரு மைல் நீள எழிற்பவனியை ஏறத்தாழ சுமார் ஆறு இலட்சம் கண்கள் கண்டுகளித்தன. ஊர்வலம் காண்பதற்கு வெளியூர்களிலிருந்து வந்து, மக்கள் வெள்ளம் ஏற்கெனவே கரைபுரண்டோடியதன் காரணமாக யாழ்நகருக்குள் நுழையவிடாது பொலிசாரால்திருப்பி அனுப்பப்பட்ட மக்களோ பல்லாயிரவர்!

மக்களின் தமிழுணர்ச்சியையும் எழுச்சியையும் குன்றிடச் செய்யும் நோக்குடனோ அல்லது மாநாட்டின் சிறப்பைக் கெடுத்திடச்செய்யும் சதி நோக்குடனோ — சாதாரணமக்களின் பிரயாண சாதனமாகிய பஸ் வண்டிகள் பல, அலங்கார ஊர்திகள் பவனிக்கு இரு நாட்களுக்கு முன்னரே யாழ் டிப்போவில் ஓட முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டதாக செய்திகள் வந்தபோதிலும்-பஸ்கள் இல்லாவிட்டாலென்ன, பைந்தமிழ் அன்னையின் ஊர்வலத்தைப் பார்த்திட எப்படியும் வந்திடுவோம் என்கின்ற உறுதியுடன், கால்நடையாகவும், கட்டை வண்டிகளிலும், கார்களிலும் லாரிகளிலும் யாழ் மாநகருக்கு வந்து வந்துசேர்ந்து, ஊண்மறந்து -உணவு மறந்து, மணிக்கணக்காக கால்கடுக்க வீதிகளின் இருமருங்குகளிலும், மாடிகளிலும், வீட்டுவாசல்களிலும், மரங்களிலும்மதில்களிலும் காத்திருந்து—காட்சி வண்டிகளைக்கண்டு, அது கூறும் வரலாற்றை அறிந்து புத்தெழுச்சி பெற்ற என் தமிழ் மக்களின் உணர்ச்சியை என்னென்று பாராட்டுவேன்?

மாலைநேரத்தில் — ஊர்வலம் பார்த்திட அழையா விருந்தாளியாக சொல்லாமற்கொள்ளாமல் வருண பகவான் வந்திறங்கியதால், மக்களின் சற்று வாட்டமுற்றபோதிலும், மழையைக் கண்டு அவர்கள் நெஞ்சம் கொஞ்சமும் கலங்கவில்லையென்பதை ஊர்வலத்தின் மறுநாள்மாலையும் வீரசிங்கம்மண்டபத்தின் முன்னால் வெளிநாட்டுப்பிரதிநிதிகளின் சுவை சொட்டும் தமிழ் பேச்சைக் கேட்கதிரண்டிருந்த இலட்சக்கணக்கான தமிழர்களின் கூட்டம் உணர்த்திற்று.

மறுநாள் மழைவரவில்லை-வருணன்கூட மக்களின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்தான்; ஆனால் மலர்க் கூட்டம்போல் மலர்ச்சியுடன் கூடியிருந்த மாணவத்தமிழர் கூட்டம்மீது மந்திகள் அன்றோ பாய்ந்தன! சில மலர்களைப் பிய்த்தெறிந்தன!

மாநாட்டு ஊர்வலத்தின் போது எதிர்பாரர்தவிதமாக இரண்டு தமிழர்கள் உயிர் இழந்திட நேரிட்டது மிகவும் பரிதாபமான சம்பவமாகும் இது பற்றி பொது மக்கள் பேசிக்கொண்ட சில வார்த்தைகள் என் காதுகளில் விழுந்தன.

"இதுநாள்வரை மகிழ்ச்சியுடன் நடைபெற்றது மாநாடு. நேற்றைக்கு அந்த 'அறுவான்' வெளிநாட்டாலை வந்தான்; அவன் கண்பட்டதோ என்னவோ, திருட்டிபட்டதுபோல், இப்படி நிகழ்ந்துவிட்டது!"

யாரைப் பற்றி இவ்வாறு மக்கள் பேசிக்கொண்டார்கள் என்பது வாசகர்களுக்கு புரியும்; விளக்கம் தேவையில்லை.

இதில் மற்றொன்றையும் குறிப்பிடவேண்டும். ஒரு நாளேட்டில் 'கனக நம்பி' என்ற பெயருக்குள் மறைந்துகொண்டு, யாரோ ஒருவர் எழுதியிருந்த கட்டுரை பொன்றில், தமிழரசுக்கட்சித் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு 'வாய் ஓரி' என்றும் 'கரி நாக்கு' என்றும் வைது தீர்த்து இருந்தார்; ஆனால் 'வாய் ஓரியும்' 'கரிநாக்கும்' யாருக்கு என்பதை மாநாட்டு ஊர்வலத்தின்போது இருவர் மரணமான முறையைப் பார்த்தால் வாசகர்களுக்கு சட்டென விளங்கும்.

தந்திக்கம்பி அறுந்து மின் கம்பியில் விழுந்து — அதன் காரணமாக மின் கம்பி அறுந்து விழுந்ததாலேயே அவர்கள் இருவரும் உயிரிழக்க நேரிட்டிருக்கிறது என்பதே நாளேடுகளில் வந்திருந்த செய்தி. இதன்படி ஆக, முதலில் அறுந்தது தந்திக் கம்பி! இதையே வாசகர்கள் கவனிக்கவேண்டும்.

தந்தியுடன் தொடர்புடைய ஒருவரே ஆரம்பத்திலிருந்து "சகுனத்தடை" யாக மாநாட்டை எதிர்த்தார்; மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாது குழப்பியடிக்க முயற்சித்தார்; மாநாட்டு அழைப்பிதழையே திருப்பி அனுப்பினார் என்பதையும், ஊர்வலத்தின் போது இருவர் மரணமான சம்பவத்தின்போது முதலில் அறுந்தது தந்திக்கம்பியே என்பதையும் பொருத்திப் பார்க்கும் வாசகர்கள் யாருக்கு 'வாய்ஓரி'யும் 'கரி நாக்கும்' இருக்கக்கூடும் என்பதை ஓரளவு ஊகித்துக் கொள்ளுவார்கள்!


ஃ ஃ ஃ

சரி, மாநாடு பற்றி முதலில் இருந்தே சொல்லாமல், ஏழாம் நாள் நடைபெற்ற காட்சி வண்டிகளின் ஊர்வலத்தைப்பற்றி ஏன் முதலில் சொல்லத் தொடங்கினாய் என்றுதானே வாசகர்களாகிய நீங்கள் கேட்கிறீர்கள்! இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

• ஒன்று — மாநாட்டையொட்டிய ஊர்வலம் எதுவும் பெரும்பாலும் மாநாட்டின் தொடக்க நாளிலேயே நடைபெறுவது வழக்கம்; ஆனால் இங்கோ, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரசு போட்டு வந்த பல்வேறு முட்டுக்கட்டைகளின் காரணமாக-ஏற்பாடுகள் செய்வதில் இருந்துவந்த தாமதத்தினாலோ என்னவோ-ஊர்வலத்தை முதல் நாளன்று இலங்கைக் கிளையினரால் நடத்தமுடியாமல் போய்விட்டது! அதனால் இறுதி நாளன்று நடத்தினார்கள்: ஆனால் கட்டுரையிலாவது அது முதலில் இடம் பெறட்டுமேயென்று நான் கருதினேன்.

இரண்டாவது — மக்கள் காட்டும் ஆதரவே எந்த ஒரு மாநாட்டின் வெற்றிக்கும் அளவுகோல். தமிழாராய்ச்சி மாநாட்டின் மீது ஈழத்தமிழ் மக்கள் காட்டிய அபரிமிதமான ஆதரவினையும் அவர்கள் கொண்டிருந்த உணர்ச்சியினையும் எழுச்சியினையும் ஊர்வலத்தின் போதுதான் அவர்கள் முழுக்க முழுக்க பிரதிபலித்துக் காட்டமுடிந்திருக்கிறது. எனவேதான் சாதாரண மக்களின் எழுச்சியைத் தொட்டுக் காட்டிய காட்சி வண்டிகளின் ஊர்வலம் பற்றி முதலிலேயே எழுதினேன்!

இவ்வாறு இலட்சோப லட்சம் ஈழத் தமிழ் மக்களின் உணர்ச்சியினையும், எழுச்சியினையும் பேராதரவையும் பின்னணிப் பலமாகக்கொண்டுதான், நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு, குறுக்கே வந்த தடைகளை யெல்லாம் முறித்தெறிந்து 'மண் வாசனை' வீசும் யாழ்ப்பாணத் திருநகரில் வீரசிங்கம் மண்டபத்தில் சனவரி 3ம் நாள் ஆரம்பமாகியது.



இதுதான் 1936ம் ஆண்டு வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்கு சென்ற அன்னபூரணிக் கப்பல். இக்கப்பலின் மாதிரி வடிவம் காட்சி வண்டிப் பவனியில் இடம்பெற்று அனைவரையும் கவர்ந்தது.

## ஒரு திருத்தம்

சென்றவாரம் வெளிவந்த இத்தொடர் கட்டுரையில் இடம் பெற்றிருந்த புகைப்படமொன்றின்கீழ் திருவாளர்கள் கனகராசாவும், நடேசலிங்கமும் சுவீடன் நாட்டறிஞர் டீல் அவர்களுடன் பேசுவதாக வெளியிடப்பட்டிருந்தகுறிப்பு தவறானது. அப்படத்தில் இடம்பெற்றிருந்தவர், இத்தாலியை சேர்ந்த அறிஞர் ஜே. ஏ. விக்கி அவர்களாகும். ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறேன்.

—கட்டுரையாளர்.

## காணியமைச்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டிருந்துவிட்டு—தமிழர் கூட்டணிக்கு எதிராக யாழ்பாணத்தில் சென்று போய் முழக்கம் செய்வதால், தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை காணியமைச்சருக்கு கூறிவைக்க விரும்புகிறோம்!

இறுதியாக அமைச்சருக்கு ஒன்று கூறவிரும்புகிறோம். தமிழரசுக் கட்சி ஓர் அரசியல்கட்சியல்ல என்றும் கூறியிருக்கிறார் காணியமைச்சர்!

ஆம் உண்மைதான், தமிழரசுக் கட்சி வெறும் அரசியல் கட்சியல்லத்தான். அது தமிழ் சமுதாயத்தின் விடுதலை இயக்கம்! தமிழ் மொழி, கலாசாரம் தமிழினம், ஆகியவற்றைப் பாதுகாத்து, தன் மானத்தை நிலைநாட்டும், தனியரசு காணத்துடிக்கும் தமிழ் சமுதாயத்தின் பாதுகாப்பு அரண் தமிழரசுக்கட்சி!

இந்த அரணை உடைத்தெறிய காணியமைச்சரால் மட்டுமல்ல—வேறு எவராலுமே ஒரு போதும் முடியாது.

## வளரும்

# மடியெறும்பு

ஒரு கடியெறும்பானது ஒரு மனிதனின் கால்களால் மிதிக்கப்படுகிறது என வைத்துக் கொள்ளுவோம் அதனது வாழ்க்கையே அந்த இடத்தில் முடியக்கூடிய சூழ்நிலை அங்கு உருவாகின்றது. அந்தக் கடியெறும்பின் ஆசைக் கனவுகள், இலட்சியக்கோட்டைகள் யாவுக்கும் அப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றதென்பது ஒரு புறமிருக்க, அது தன்னுடைய உயிரையே காப்பாற்றமுடியாத நிலையில் தவிக்கின்றது.

இப்பொழுது காலின்கீழ் மிதிபடும் எறும்பு என்ன செய்கிறது? உடனடியாக தன்னைவிட ஒருகோடிமடங்கு பலமுள்ள மனிதனுடைய உள்ளங்காலைத் தன் உயிரையே வெறுத்துக் கடிக்கின்றது கடியின் வருத்தம் தாங்காத மனிதன் காலை எடுக்கவும் அது தப்பிக் கொள்ளுகிறது.

உலகைக் கட்டியாளும் பலம்பொருந்திய மனிதனை வென்று வாழ்வதற்கு அது காலநேரத்தை அனுசரித்து போட்ட 'கடி' உதவிசெய்கிறது. இதனால்தான் போலும் இது 'கடியெறும்பு' என அனுபவசாலிகளால் அழைக்கப்படுகின்றது.

தமிழனை அவனது சுறுசுறுப்பையும், சளையாத உழைப்பையும் கொண்டு எறும்பு போன்றவன் (As industrious as an ant) என எல்லோரும் கூறுவார்கள். ஆனால் இவன் என்ன எறும்பு?

தன்னுயிரைத் தன்னோடு சேர்த்து வைத்திருப்பதற்கே வழியின்றித்தவிக்கும் சூழ்நிலை, செயற்கையான கட்டுப்பாடுகளால் அவன்மீது திணிக்கப்பட்டும், அவன் திருப்பிக்கடிக்கும் கடியெறும்பாகவல்லாமல் அடிமைவாழ்வு போதும், அப்படியும் வாழமுடியாது விட்டால் மைதியாகச் செத்துமடிவோம் ஆனால் திருப்பிக் கடியோம் என்கின்றான்.

இவன் என்ன 'மடியெறும்போ'!

—நிரன்—

# காணியமைச்சரின் கோணல் பேச்சு! மானங்கெட்ட பிறவிகளின் பாதபூசை!

சிங்கள அரசாங்கத்தின் காணி அமைச்சர் கொப்பேகடுவ அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது—அவர் யார்? எப்படிப்பட்டவர்? இதற்குமுன் தமிழர்களைப் பற்றி அவர் கூறிய கருத்துக்கள் என்னென்ன—இவை பற்றியெல்லாம் சிறிது கூடச் சிந்திக்காது — அவருக்கு கழுத்து நிறைய மலர் மாலை சூட்டி, நிலபாவாடை விரித்து — வெள்ளாய மாலை போட்டு — விதந்து போற்றி — விழுந்து வணங்கி— அவர் காலடிபட்ட மண்ணை நக்கி மகிழ்ந்திருக்கின்றனர், மானம் ரோசம், சூடு சொரணை இஞ்சிற்று மற்ற அடிமைப் பிறவிகள்!

தமிழினத்தின் உரிமைகளை மறுத்து—அவர்களை இரண்டாந்தர நிலைக்கு தள்ளி தமிழ் சமுதாயத்தை அழித்தொழித்திடும் புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வந்துள்ள சிங்கள அரசாங்கத்தின் அரை, முழு அமைச்சர்களுக்கு—ஏன் சிங்கள அரசாங்கத்தின் பின் வரிசைக்காரர்களுக்குக்கூட கொடி குடை ஆலவட்டம் பிடித்து, கும்பிட்டுத் தெண்டனிட்டு - சிங்களத்தில் பேசி அவர்களின் சிந்தை மகிழச்செய்து — இன்பப் பொருள்களையெல்லாம் அவர்களுக்குக் கூட்டிக்கொடுத்து — தமிழ் சமுதாயத்தை தலை குனிய வைத்து வருகிறார்கள் காட்டிக் கொடுப்பதற்கென்றே தமிழர்களாக பிறந்துவிட்ட சில தரங்கெட்ட பிறவிகள்!

நாங்கள் முழுவெங்காயங்கள் என்று கூறுவதுபோல சில துரோகிகள் அமைச்சருக்கு வெங்காய மாலை சூட்டினராம்! ஏதோ ஓர் ஊரில் யாரோ ஒரு பச்சைத் துரோகி, சிங்களத்தில் அமைச்சரை வரவேற்றுப் பேசி, தமிழ் சமுதாயத்துக்கு அவமானம் தேடியிருக்கிறது!

இந்தச் சோற்றுத் துருத்திகளின் — சோற்றுலடித்த பிண்டங்களின் பாத பூசை கண்டு தம்மை மறந்த நிலையில் - அமைச்சரும் ஆங்காங்கே வாயில் வந்தபடி பேசி விட்டுத் திரும்பியிருக்கிறார்!

தமிழர்கள் - அனைவரும் சோற்றுத் துருத்திகளுமல்ல - சோற்றுலடித்த பிண்டங்களுமல்ல — உணர்ச்சியும் தன்மானமும் படைத்த விடுதலைத் தாகம் கொண்ட ஒரு சமுதாயத்தினர் என்பதை அமைச்சருக்கு நாம் கூறிவைக்க விரும்புகிறோம்!

யார் இந்தக்காணியமைச்சர்?

கண்டிச் சிங்களவர்களுக்கு சொந்தமான மலைநாட்டுப் பிரதேசங்களை தோட்டத் தொழிலாளர்களான தமிழர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாக வகுப்பு வாதத்தை நாள்தோறும் கக்கி வருபவர்!

தமிழர்களின் தோட்டங்களைப் பறித்து —அவற்றைச் சிங்களவர்களுக்கு தாரை

## 'எஸ்ஸாரெம்'

வார்த்துக்கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பவர்!

விவசாயம் செய்வதற்கு நிலம் தரும்படி மலைநாட்டுத் தமிழர்கள் நித்தநித்தம் கேட்டும் இன்னும் அவர்களுக்கு நிலம் கொடாதவர்!

அண்ணாமலைக்கும் -தொண்டமானுக்கும் மலையகத்தில் இனி இடம் இல்லை என்று மேடைதோறும் கூவி தமிழ் விரோதம் என்கிற நஞ்சை மலையகத்தில் ஊட்டிவருபவர்.

மலையகத்தில் தொழில் இன்றியும் நிலமின்றியும் விட்டப்பட்டு, வாழவழியின்றி பசிபட்டினியுடன் உணவுற்பத்தியில் ஈடுபடும் நோக்குடன் வடக்கு, கிழக்கில் வந்து குடியேறுகின்ற மலைநாட்டுத் தமிழர்களை அங்கிருந்து விரட்டியடிக்கும் சட்டத்தைப் பிறப்பித்த அரசாங்கத்தின் அமைச்சர்!

இது மட்டுமல்ல—

வல்வெட்டித்துறை மூலம் இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுவதாக ஆதாரமற்றபொய்யை திரும்பத் திரும்பக் கூறி சிங்களவர்கள் மத்தியில் தமிழர் மீது தப்பெண்ணம் ஏற்படக்

முடித்த சைவ கலாசார மண்டபத்தை — மண்டபம் கட்டி முடிக்கப்பட்டபின்னர்—எதுவித முன்னறிவித்தலும், நட்ட ஈடுமின்றி, திடீரென பறித்துக்கொண்டவர் திரு. கொப்பகடுவ.

சைவ மக்களால், சைவ மக்களின் பணத்தைக் கொண்டு கட்டிமுடிக்கப்பட்ட சைவ கலாசார மண்டபம் அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டு — இன்று பௌத்தர்களுக்கு கையளிக்கப்படுவதற்கு திட்டமிடப் படுகிறதென்றால் அந்தக்

தாம் கூறுவதையெல்லாம் நம்புவதற்கு தமிழர்கள் அவ்வளவு தூரம் மறதி படைத்தவர்கள் என்று கருதிவிட்டார் போலும் திரு. கொப்பகடுவ!

நில உச்சவரம்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் தமிழர் கூட்டணி பா. உ.க்கள் ஆதரித்தனர்; ஆதரித்தது மாத்திரமல்ல—நில உச்சவரம்பு ச்சட்டத்திலிருந்து, கம்பெனிகளுக்கு விதிவிலக்களிக்கக்கூடாது; நிலச்சுவாந்தர்கள் இந்த விதிவிலக்கு மூலம் தப்பி விடஇடமளிக்கக்கூடாது என்று அழுத்தம் திருத்தமாக கூறியவர்கள் தமிழர் கூட்டணியினர்! அத்துடன் நிலத்துக்கு உச்சவரம்பு கொண்டு வருவதுபோல —பணத்துக்கும் — செல்வத்துக்கும் உச்சவரம்பு கொண்டு வரப்படவேண்டுமென்று பாராளுமன்றத்தில் வாதாடிய ஒரே கட்

# நிலத்துக்கு மட்டுமல்ல - பணத்துக்கும் உச்சவரம்பு கோரியவர் தமிழரசார்!

காரணமாக இருந்தவர் இதே கொப்பகடுவதான்!

அதுவும் — பாதுகாப்பு துணை அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி அவர்கள், இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுவதாககூறப்படுவதை முற்றாக மறுத்த பின்னும், தம் கருத்தை மாற்றிக் கொள்ளாதவர் கொப்பகடுவ.

கொப்பகடுவவின் இந்தப் பிரச்சாரத்தின் காரணமாகத்தான், யாழ்ப்பாணத்தில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டபோது —சிவகளப் பகுதிக்கு அரிசி வாங்கவந்த தமிழர்கள், சிங்களவர்களால் அடித்துநொருக்கப்பட்டார்கள்! இதை தேசியபேரவையில் வி. என். நவரத்தினம் அவர்களே கூறியிருக்கிறார்!

இதுமட்டுமல்ல—

கொழும்பு கொம்பனித் தெருவில், சைவ முன்னேற்றச் சங்கத்தினர், சிறுகச் சிறுக இந்துக்களிடம் பணம் திரட்டி இலட்சக் கணக்கான ரூபா செலவில் கட்டி

கைங்கரியத்தை நடத்தியவர் இதே காணியமைச்சர் தாம்!

இப்படி தமிழர்களுக்கும், சைவசமயத்துக்கும் எதிராக நஞ்சு கக்கிவரும் ஒரு அமைச்சருக்குதான் யாழ்ப்பாணத்தில் பாதபூசை நடத்தியிருக்கிறார்கள் மானம்கெட்ட சில நக்கிப் பிறவிகள்!

அந்தப் பாதபூசையில் மகிழ்ச்சியடைந்த காணியமைச்சர் ஆங்காங்கே தமிழரசுக் கட்சிக்கும் கூட்டணிக்கும் எதிராக பல பொய்களை அவிழ்த்துவிட்டிருக்கிறார்! அவர் கூறிய பொய்களில் சிலவற்றை இங்கு அம்பலப் படுத்துகிறோம்:

### முதலாவது பொய்

காணி உச்சவரம்புச் சட்டத்தினால் பறிமுதலான காணியைத் திரும்பப் பெறவே தமிழர் கூட்டணி போராட்டம் நடத்துவதாக அடித்துமுழக்கியிருக்கிறார் திரு. கொப்பகடுவ!

சியினர் தமிழர் கூட்டணி பா. உ.க்கள்!

இவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு — மக்கள் ஏதும் அறியா மூடர்கள் எனும் நினைப்பில்—உரிமைக்காக போராடும் தமிழர் கூட்டணிமீது இப்படியான கறைகளைப் பூசி, களங்கம் ஏற்படுத்த முடியாதென்பதை அமைச்சர் உணர வேண்டும்.

### இரண்டாவது பொய் -

தொண்டமானின் காணியை எடுத்ததற்காக தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் எதிர்ப்புக்களை தொடுக்கின்றனர்; ஆனால் வடபகுதியிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு காணிகோரி அவர்களில் யாரும் என்னிடம் காணி கேட்டது கிடையாது'' என்று கூறியிருக்கிறார் கொப்பேகடுவ. இது அப்பட்டமான பொய்யாகும். பொய் மட்டுமல்ல — இதில் விஷமத்தனமும் கலந்திருக்கிறது — தமிழனை, யாழ்ப்பாணத்தான் மலைநாட்டான் என்று பிரிக்கின்ற விஷவிதையும் கலந்திருக்கிறது.

தமிழரசுக் கட்சி பா. உ.க்கள் தனிப்பட்ட தொண்டமானுக்காக ஒருபோதும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்ததில்லை — மலையகத்தில் நிலமின்றிவாடும் தோட்டத் தொழிலாளர்களாகிய தமிழர்களுக்கு, வடக்கு, கிழக்கில் நிலம் வழங்கி அவர்களை விவசாயத்திலீடுபடுத்துங்கள் என்றே கோரிவருகிறார்கள், அதுமட்டுமன்றி, யாழ்ப்பாணத்தில் காணியற்ற மக்களுக்கு காணி வழங்கும்படி தேசிய பேரவையில் எத்[illegible] தடவைகளில், தமிழரசுக்கட்சி பா. உ. க்கள் பலரும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

ஒருபானை சோற்றுக்கு ஒரு அவிழ் பதம் போல கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது திரு வி. தர்மலிங்கம் பேசிய பேச்சின் ஓர் பகுதியை கீழே தருகிறோம்,

''யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் 13,000 இளைஞர்கள் காணி வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக காணி கொடுக்கப்பட்டால், அவர்கள் உணவுற்பத்தியில் உற்சாகத்தோடு ஈடுபடுவார்கள் உணவு உற்பத்தித் திட்டத்தில் வெற்றி காண்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும்''

—ஹன்சார்ட் தொகுதி 8 இலக்கம் 6— பந்தி 935 (12-11-1973.)

— இவ்வாறு தர்மலிங்கம் பா. உ. அவர்களும் ஏனைய தமிழரசு பா. உ.க்களும் இடித்துக் கூறியிருக்கிறார்கள்.

தேசியபேரவையில் இதையெல்லாம் நேருக்கு நேர்

(8-ம் பக்கம் பார்க்க)

# கொப்பகடுவையின் தப்புப் பிரச்சாரத்துக்கு சுடச்சுடச் தருகிறார் பண்டிதர் இரத்தினம்!

''வேலணைக்கு வருகை தந்த விவசாய அமைச்சர் திரு. கொப்பேகடுவ எனது தொகுதியிலுள்ள வேலணையில் உரை நிகழ்த்துகையில், ''தமிழர் கூட்டணியைச் சேர்ந்த எம். பி.க்கள் விவசாய அபிவிருத்தி பற்றியும் விவசாயிகளின் குறைகள் பற்றியும் எம்மிடம் ஒன்றும் கேட்கவில்லை. இவ்வாறான வர்களை விவசாயிகள் எப்படி நம்புவது'' எனப் பேசினார் எனும் செய்தி ஈழநாட்டின் 4-3-74 இதழில் வெளிவந்துள்ளது.

ஓர் அமைச்சர் இவ்வாறு பிழையான செய்தியைப் பொறுப்பற்றமுறையில் அதுவும் எனது தொகுதியில் கூறியது கவலைக்குரியது.

திரு. கொப்பேகடுவவுக்கு நான் விடுத்த வேண்டுகோள்கள் கமக்காரர்கள் சார்பில் செய்த முறையீடுகள் பலவாகும். இவற்றை முதலாகக் கவனித்து அவர் நடவடிக்கை எடுத்திருந்தால் எங்கள் பகுதி விவசாயிகள் பல நன்மைகளை அடைந்திருப்பார்கள்.

1. எனது தொகுதி கமக்காரருக்கு போதிய நல்ல நெல் கொடுக்கப்படவில்லை. இதை நான் பலமுறை சுட்டிக்காட்டிப் போதிய விதை நெல் பெற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தேன். இதனை அவர் மறுப்பாரா? இது குறித்து நான் அவருக்கு அனுப்பிய கடித எண் 20/59 திகதி 3.10.73.

2. ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள காணி இல்லாத இளைஞர்களுக்குக் காணி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு நான் எழுதிய 20/55ஆம் எண்ணையும் 1.3.73ஆம் திகதியையுமுடைய கடிதத்துக்கு அவர் எனக்கு 16.8.73ஆம் திகதி மறுமொழியும் அனுப்பியுள்ளார்.

3. வடபகுதிக் கமக்காரரின் கஷ்டநஷ்டங்கள் குறித்தும் அமைச்சர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும் நான் அவருக்கு 19 2 73 ஆம் திகதி பதிவு அஞ்சலில் கடிதம் அனுப்பியுள்ளேன்.

4. யாழ். மாவட்டத்துக்கு மேலதிகமாக ஆயிரம் தொன் உருளைக்கிழங்கு விதை அனுப்பி உதவுமாறு 2.11.73இல் அதிகாரத்தந்தி அனுப்பினேன்.

5. 23.12.72ஆம் திகதி அனுப்பிய கடிதத்தில் வேலணையில் நிறுவியுள்ள விவசாய சேவை நிலையத்தைப் போலநெடுந்தீவிலும், நாரந்தனையிலும் புங்குடுதீவிலும் நிறுவுமாறு கேட்டுள்ளேன்.

6. 1971இல் கமத்தொழிலில் பி. எஸ். சி. பட்டம் பெற்ற தமிழர்களுக்கு தற்காலிக கமத்தொழில் உத்தியோகத்தர், ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் வழங்கப்படவில்லை எனப் பட்டம் பெற்றோர் முறையிட்டதைத் தொடர்ந்து இது குறித்து அவருக்கு நான் 29.11.71 இல் ஒரு அவசரத் தந்தி அனுப்பினேன். அவர் 26.1.72இல் மறுமொழி அனுப்பினார்.

7. தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை விரைவில் யாழ்ப்பாணக் கமக்காரருக்குக் கொடுக்குமாறு கேட்டு 22-1-74ஆம் திகதி அவருக்கு அவசர தந்தி அனுப்பினேன்.

8. யாழ்ப்பாணமாவட்டக் கமக்காரருக்குப் போதிய தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனும் எனது தீர்மானம் 12-9-73இல் யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கமத் தொழில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. 1500 இயந்திரங்கள் யாழ்ப்பாணத்துக்குத் தருவதாகவும் அறிவிக்கப்பட்டது,

(9) சென்றமாதம் 7-ம் திகதி ஆனையிறவிலுள்ள நெல்தடை நிலையத்தை அகற்றுமாறு தேசிய அரசுப் பேரவையில் அவரைக் கேட்டேன்.

(10) அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருமுன் 25-2-74-ம் திகதி அவருக்கு அனுப்பியஅவசரத் தந்தியில் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் அரிசி நெல் கொண்டு செல்வதைத் தடைசெய்ய வேண்டாமெனவும், இம் மாவட்ட மக்களுக்கு அரைக் கொத்தரிசியை மேலதிகமாகக் கொடுக்குமாறும் நெல்லின் உத்தரவாத விலையைக் கூட்டுமாறும் கேட்டிருந்தேன்.

தமிழ்ப் பகுதிகளினதும் எனது தொகுதி மக்களினதும் குறைகளைச் சுட்டிக்காட்டி அவருக்கு விடுத்த கடிதங்கள் தந்திகள் இன்னும் பல. இச்சூழ்நிலையில் அமைச்சர் திரு. கொப்பேகடுவா நாங்கள் எதுவும் கேட்பதில்லை என்று கூறுவது நகைப்புக்கிடமானது.

அவரில் குறைகூறுவானேன்? இங்கு வருகை தரும் அமைச்சர்களைக் கூட்டிச் சென்று மாலை மரியாதை பெற்றுக்கொடுப்பவர்களின் கருத்துக்களையும் அமைச்சர்கள் கூறி அவர்களை மகிழ்விக்கவேண்டுமே!

சுகாதார அமைச்சரும் முன் இவ்வாறு கூறினார். சுடச்சுடக் கொடுத்தோம்; இப்பொழுது இவர் மாட்டிக்கொண்டார். பத்திரிகை வாயிலாகமட்டுமன்றிதேசிய அரசுப் பேரவையிலும் கொடுப்போம்.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


5 வது திகிலூட்டும் வாரம்!

சென்ட்ரல்

(மருதானை) 2, 6. 9.30
(ஞாயிறு காலை 10 மணிக்கு)

ராணி (யாழ்ப்பாணம்) 10.30, 2.30, 6.30, 9.30

சிறந்த இசையமைப்பு சங்கீதம் நகைச்சுவை கலந்த தேன்போல் இனிக்கும் திரையோவியம்!

முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற நகைச்சுவைச் சித்திரம்

நாகேஷ் — விஜயலலிதா
எம். ஆர். ஆர். வாசு
— நடித்த —

தேன் கிண்ணம்

(பாலிகள் ரத்து)




## ருஷ்ய எழுத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை ஆகியவற்றில் நம்பிக்கைகொண்ட எழுத்தாளர்கள் அனைவரையும் முன்வரும்படி அறை கூவி அழைக்கும் அதே சமயம், எழுத்தாளர்களின் உரிமையைப் பறித்து அவர்களைத் துன்புறுத்துகின்ற கொடுங்கோன்மையை உடன் நிறுத்துமாறு சோவியத் ரஷியாவை ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை கேட்டுக் கொள்ளுகிறது.

ஃ ஃ

"ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவவேண்டிய இலங்கைக் கலாசாரச் சபை தன்னுடைய கடமையிலிருந்து தவறி நடுவுநிலை பிறழ்ந்து, ஒரு பக்கச் சார்பாக செயற்பட்டு வருவதாக தமிழ் எழுத்தாளர்களிடையே இருந்து வருகின்ற மன உளைச்சலைப் போக்கிட கலாசார அமைச்சர் தாமதமின்றித் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் அதே வேளையில் — 1972ம் ஆண்டுக்கான சிறந்த கவிதை நூலுக்கான பரிசை எந்த ஒரு தமிழ்க் கவிதை நூலுக்கும் கலாசார சபையினர் வழங்காது புறக்கணித்துள்ளதன் காரணமாக தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள மனக்கொதிப்பை அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வந்து, இப் பரிசு உடன் தகுதியான தமிழ்க் கவிதை நூலுக்குக் கிடைக்க வழி செய்யும் படி ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை வற்புறுத்துகின்றது.

## கவியரங்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இலங்கை மீண்டும் எரிகிறது,' 'இராமாயணமும் செல்வாயணமும்" ஆகிய நாடகங்களும் நடைபெறுகின்றன.

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் கண்காட்சியும் நடைபெறவுள்ளது. இந்த கண்காட்சியில் நான்காவது உலகத் தமிழ் மாநாட்டுப் படங்களும் இடம் பெறும்.


மற்றுமோர் வெள்ளி விழாச் சித்திரம்!

கிங்ஸ்லி-பிளாஸா லிடோ (யாழ்நகர்)

இது ஒரு குடும்பக் கதை.
கணவன் - மனைவி இருவரும் வேலைசெய்வதனுல் ஏற்படும் பிரச்சினை!
வண்டி ஓடச் சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும்! அந்த இரண்டில் ஒன்று சிறியதென்றல் எந்த வண்டி ஓடும்? ஆனல்...

முத்துராமன், ஜெயலலிதா, சுந்தரராஜன், சாவித்திரி, சோ, மனோரமா, சசிகுமார், ஸ்ரீலேகா, M.R.R. வாசு, நடித்தது.

சூரியகாந்தி

டைரக்ஷன்: சீனிவாசன்

73-வது நாள் கெப்பிட்டல்—விஜயா (மட்டுநகர்)
சிவாஜி-கே. ஆர். விஜயா, மனோகர், நாகேஷ் நடித்த—
சொர்க்கம் சண்டமன் கல

2-வது வாரம் செல்ல மகால்
வி. எஸ். தி பிலிம்ஸ் வெளியீடு



நாகேஷ் கே. ஆர். விஜயா

சுந்தரராஜன் — விஜயலலிதா நடித்த

கல்யாண ஊர்வலம்

கெயிட்டி 2-வது வாரம்!

ஜக்கம்மா

தமிழில் வெளிவரும் முதல் கௌபோய் திரை விருந்து



ஜெய்சங்கர் - சாவித்திரி
உஷா S. V. சுப்பையா
தேங்காய் சீனிவாசன்
மனோரமா


இப்பத்திரிகையினை நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1974ம் வருடம் மார்ச் மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.